செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு 2003.	பகுதி
67	ஆனி, ❋ மார்கழி. சூன், ❋ டிசம்பர் 1972.	4

உள்ளே ... ...

		பக்கம்
1	சங்கச் செய்திகள் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் விழா கலைமகள் விழா	ஆ
2	பாண்டித்துரையும் பாசுகரரும் ...	1
3	எது நாடு	5
4	கவிதையும் காலமும்	9
5	செத்துங் கொடை கொடுத்த சேதுபதி	15
6	'அல்லது' தொடரன் அமைப்பு முறை	19
7	மொழியியல் கலைச் சொல் விளக்கம்	24
8	பள்ளு நாடகங்கள்	31
9	நூல் மதிப்புரை	42அ
10	சேதுபதியும் விவேகானந்தரும்	43
11	தமிழ்ச் சங்கச் செய்திகள் (தேர்வுக் குறிப்புக்கள்) ...	51
12	தமிழ்க் கிளவி ...	57

சங்கச் செய்திகள்.

வள்ளல் பாண்டித்துரை அவர்களின் 104-வது ஆண்டு நிறைவு விழா.

பெருந்தகையீர்,

சங்க காலச் சிறப்பனைத்தும் பிற்காலத்தில் பெற்று குமரி முதல் இமயம் வரையிலும் பெரும் புகழ் கொண்டு விளங்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி நன்கு வளர்த்தவரும், தனிப் பெருந்தலைவனாய் தன்னிகரற்ற ஆற்றலோடு அருங்கலைகள் வளர்த்தவருமான வள்ளல் பாண்டித்துரை அவர்களின் 104-வது ஆண்டு நிறைவு விழாவை வரும் சனவரித் திங்கள் 6, 7ம் நாள் (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாட்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுவன செய்து வருகின்றோம்.

அதுபோழ்து வள்ளல் பாண்டித்துரை அவர்களின் பண்பினையும் சிறப்பினையும் எடுத்துக் காட்டும் வகையில் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெற இருக்கின்றன.

தமிழுக்குச் சிறப்புச் செய்யும் இச்சீரிய தமிழ்த் தொண்டினில் பங்கு பெற விரும்புவோர் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொள்ளவும்.

கலைமகள் விழா

16—10—72ஆம் நாளன்று தமிழ்ச் சங்கத்தில் கலைமகள் விழா. செந்தமிழ்க்கல்லூரித் தாளாளர் உயர்திரு மா. தனுக்கோடி பாண்டியன் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரிப் பேராசிரியர்களும் மாணவர்களும் விழாவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

வழிபாடுகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே நடைபெற்றன.

அறிவிப்பு

மொழியின் படிப்படியான வளர்ச்சிகளை முறையாக ஆராய்வதற்குத் துணை புரியும் "திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்" என்ற அரியதோர் கட்டுரை அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

பாண்டித்துரையும் பாசுகரரும்

சைவத் தமிழ்மணி: சு. சுவர்ண காளீச்சுரன், திருவையாறு.

இன்று எங்கெங்கணும் திருக்குறட் கருத்துக்கள் பேசப் படுகின்றன. எங்கெங்கணும் வள்ளுவர் திருநாமம், திருகுறட் பேரவைகள், ஆய்வுகள், ஆனல் அன்ருேர்நாள். தமிழ் வளர்த்த தனி வள்ளல் பாண்டித்துரைச்சாமி, மதுரையினில், தமிழ் வளர்த்த கூடலினில், திருக்குறள் அரங்கேறிய தனிப் பதியில் நிகழ்ந்த பேரவையில் சொற்பணியாற்ற வந்திருந்த போது சில ஐயம் போக்கிக்கொள்ள திருக்குறட் புத்தகம் தேடிய போது மதுரையில் யாரிடமும் இல்லையென வறிந்தார்; திகைத் தார். தனதருமைத் தந்தை பொன்னுச்சாமித் தேவரவர்கள், யாழ்ப்பாணம், திருமிகு ஆறுமுக நாவலர் அவர்கள் இராமனுத-புரம் வந்தும், தன்னைப் பார்க்காத நிலையில், தாமே விரும்பிய போதும் அவர் மறுக்க அதனையும் பொருட்படுத்தாமல் தமிழின் பாலுள்ள தனிப்பெருங் காதலால் நாவலருடைய நிபந்தனைக ளுக்குட்பட்டு, தனது பேரவையின் கண் அழைத்து உலகப் பொது மறையாம் திருக்குறளைப் பரிமேலழகருரையுடன் சிறந்த பதிப்பாக வெளியிடச் செய்தார்கள்.

இவ்வாறு தனதருமைத் தந்தையார் செய்தபோதிலும் தமிழ் மதுரையாம் பெரும் பதியில் ''வள்ளுவம்'' வழங்கா நிலை யறிந்து வருந்தினர் பாண்டித்துரைச்சாமி. இந்நிலைமாற நான் காந் தமிழ்ச்சங்கம் நாட்ட உறுதி கொண்டார். கி. பி. ஆயிரத் துத்தொளாயிரத் தொன்றுமாண்டு செப்டம்பர் நாலாந் தேதி யன்று இச்செய்தியை எல்லோருக்கும் அறிவித்தனர். பெரும் புலவர் பலரும் ஒருங்கே கூடினர். ஆயினும் நமது பாண்டித் துரைச்சாமி அவர்கள் ''தாம் தொடங்கும் செயல் சிறந்த முறை யில் பரிணமிக்க வேண்டுமே'' என்று கவலை கொண்டார்கள். இக்கவலையை அறிந்த சேது மன்னரும், நமது தேவரவர்களது சிறிய தந்தையார் மகனுருமாகிய பாசுகர சேதுபதியவர்கள் ''நாம் முன்னிருந்து நிதியுடன், நமது ஆசுதானப் புலவர்களையும் தருவோம் எவ்விதத் தமிழ்ப் பணிக்கும் அஞ்சவேண்டாம்''

என்றும் கூறி அவ்வாறே தம் பரிவாரங்களுடன் வந்திருந்து தன் முன்னேயே பிலவயாண்டு, ஆவணித் திங்கள், பதின்மூன்ரும் நாள் ஞாயிற்றுக்கிழமையும், சித்திரை நாண் மீனும் கூடிய நன்னுளிலே பகல் ஒன்றரை மணிக்குமேல், இரண்டே மூக்கா லுக்குள் சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதனேடு மட்டுமின்றி பாண்டியன் புத்தக சாலைக்குச் சேமித்துவைத்திருந்த நூல்களனைத்தும் தந்தார்கள். இத்தகைய பெருங்கருணையை நினைத்து நமது தேவரவர்கள் உயர்திரு. பாசுகர சேதுபதி மன்னரவர்கள் இறையடி சேர்ந்த போது பின்வருமாறு கலங்கினுர்கள், சேதுபதியே நீ விண்ணுல கம் சென்றதும், தமிழ்ச் சங்கத்திற்கு நிதியைத் தேடவோ? அல் லது அங்குள்ள புலவர்களையும் இங்கு அழைத்து வரச்சென் றனையோ? என்று கையறு நிலை பாடினுர்கள். அப்பாடலைக் கீழே காண்போம்.

"பண்புலவு தமிழ்ச் சங்கம் நிறுவல் கரு
தியஞான்று பரிவு கூர்ந்து

நண் புலவு திருவாக்கால் தளர் வொழிக வென்
றெனக் கிசைத்த நலம் பொய்யாதே

மண் புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான்போய்

விண்புலவ ரோடுதம னியங் கொணர
நினைத்தனையோ வேந்தரேறே!"

மேலும் தேவரவர்கள் என்னுயிரும் மகிழும்படி அண்ணு வென்றழைக்க இனி ஆளில்லையே! அண்ணுவென்றழைத்தவுடன் மன்னு! மன்னு! மன்னு என நானழைப்பேனே! இனி யான் யாரை இவ்வாறு அழைப்பேன். இவ்வாறு மதித்துச் சொல்ல யாரிருக்கின்ருர்கள்? பாசுகர மன்னு! தேன் போல உனது பிரசங்கமதை உலகுக்கு அருளுவாயே! நீ தேவர்களுக்குச் செவி யுணவு கொடுத்தற்காகச் சென்றனையோ? குறிப்பறிந்து கொடுக் கும் உனது கொடைத்திறத்தினை அங்குள்ள காமதேனு முதலிய வற்றிற்கு உணர்த்துவதற்காகச் சென்றனையா? உனது பிரசங் கத்தால் இவ்வுலகில் அரனடியார் பெருமை, சமயநெறி முதலிய வற்றை எடுத்துப் புகட்டியும் திருந்தா நிலையில் இவ்வீணரோடு

இருத்தலாகாது என்று கருதி விண்ணுடு சென்றனையா? என் றெல்லாம் கல்லும் கனிந்துருக, கனி தமிழால் பாடிப்பாடி வருந் தினர் நமது பாண்டித்துரைச்சாமியாகிய தேவரவர்கள்.

மேலும் நமது சாமியவர்களால் ஆதரிக்கப்பட்டு உயர்ந்த மு. இராகவையங்காரவர்கள் பாசுகரர் பிரிந்த காலத் தில் "நமது தமிழ்ச்சங்கத்தையும் நமது தேவரவர்களையும் எவ்வாறு பாசுகரரால் மறக்க முடிந்தது" எனக் கருதுகின் றூர்கள்.

"பண்ணுர் தமிழ்வல்ல பாண்டித் துரை யெங்கோன்
கண்ணு வளர்த்துவரும் கன்னித் தமிழ்ச் சங்கம்
எண்ணு உதவி யெலாம் ஈந்து மகிழ்ந் தாய் மன்னு!
அண்ணு லதை மறந்து சென்ற தழகேயோ"

மற்றும் பாவலர் பலரும் நமது பாசுகரர் புகழைப் பாடிப்பாடிப் பரவியதுண்டு. ஒன்றிரண்டை மட்டும் இனிக் காண்போம்! தமிழ்த் தாத்தா! உ. வே. சுவாமிநாதையரவர்கள் ஒரு நவராத்திரி விழாவில் பாடிய பாடல் நினைவிலிருப்பதாக அவர்களது "என் சரிதத்தில்" எழுதும் இரண்டடிகள் பின்னே வருவன:—

விண்ணிற் சிறந்திடு பாசுகரன் போல் விளங்கு மிந்த
மண்ணிற் சிறந்திடு பாசுகர பூபதி வாழியவே"

இவ்வடிகளால் ஐயரவர்கள் விண்ணிற் சிறந்த பாசுகரர் போல் மண்ணிற் சிறந்து விளங்குகின்றூர் எனக் கூறினூர்கள். இரு பாசுகரர்களும் எவ்வாறு ஒத்தார்கள் என்பதை கொட்டாம்பட்டியில் வாழ்ந்த எம். கருப்பையாப் பாவலரவர் கள் சிலேடை நயத்தால் நன்று விளக்குகின்றூர்கள். சேர்ந்தோ ரிரவை யொழித்து அரிய திருவைச் செய்யும் திறம் மேலான திசையிற் சேர்திறம் இவற்றூல் இருபாசுகரர்களும் ஒத்தே விளங்குகின்றூர்களாம்.

இராமச்சந்திரக் கவிராயர் அவர்களோ! மேனகை இல் லாததினுல், குறைமதியைப் பொருந்துவதால் வெய்யோனெனத்

தானிருக்கும் தன்மையினுல் ஈரம் வற்றக்குவலயத்தை வாட்டுதலால், இத்தகைய குணங்களெல்லாம் பாசுகர சேதுபதிக்கு அப்பாசுகரன் ஒரு நாளும் உவமையாகான் என்றே முடிவு கட்டிவிட்டார்.

நாகை ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் பின்வருமாறு பாராட்டுகிருர்கள்.

பலம் படைத்த அரசருண்டு, படை படைத்த அரசருண்டு
பகரொணுத நிலம் படைத்த அரசருண்டு, நிதி படைத்த
அரசருண்டு நீணிலத்தில்
நலம் படைத்த மூர்த்தி தலம் தீர்த்தமிவை
நாடுனர்க்கு நல்கும் புண்ணிய
குலம் படைத்த அரசருண்டோ? என்கிருர்

இவ்வாறு புலவர் பெருமக்களுக்கு வழங்கி மகிழும் கொடையன்றி பக்தியால் பரமனுக்களித்த கொடைகள் பலப் பல. காளையார்கோவிலில் செய்த இடபம், அங்கங்கே பெருமானுக்குச் செய்துவைத்த உருத்திராக்கக் கண்டிகைகள் போன்றவைகள் இதனை நன்குணர்த்தும், இத்தகைய பாசுகரர் பிரிந்த தினத்தையும் நமது பாண்டித்துரை வள்ளல் பகர்கின்ருர்கள் அப்பெருமகனுரது வாக்கோடு இக்கட்டுரையை முடிப்போம்.

"சோபகிரு தாண் டொன்பான் றாய்மதி ராறுவளர்
மாபிறையெண் ணுளிரவி வாரமீன்—நீபமலே
மீதுபதி தூக்கு மலரடியைப் பாற்கரனும்
சேதுபதி சேர்ந்த தினம்.

எது நாடு?

(தமிழ் நாவலர், புலவர் திரு. சி. அரசப்பனுர், உறையூர், திருச்சி–3
தமிழகப் புலவர் குழு உறுப்பினர்.)

தனிமனிதன் சேர்ந்து குடும்பமாக வாழ்கிருன். தலைவன், தலைவி, மக்கள் குடும்பமாகும். அவர்கள் இருந்து வாழுமிடம் இல்லமாகும். கணவன் பொருள் தேடுகின்ருன். மனைவி உணவு சமைக்கிருள். மக்கள் மகிழ்ந்துண்டு வாழ்வுக் கலை பயிலுகின்றனர்.

குடும்பங்கள் பல சேர்ந்து தெருவாகின்றது. தெருக்கள் பல சேர்ந்து ஊராகின்றது; நகராகின்றது. சிற்றூரும் பேரூரும் சேர்ந்து நாடாகின்றது. அந்த நாடு கடல்களும், மலைகளும், காடுகளும் நன்செய், புன்செய் நிலங்களும் பெற்று விளங்குகிறது.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் இணைப்பது மொழி. மொழி எண்ணத்தை ஒழுங்குபடுத்தி ஒழுங்குபட்ட எண்ணத்தைச் சுமந்து பிறரிடம் சேர்க்கின்றது. மொழியின் நடை, சொல்லாற்றல் ஒலி அமைப்பு முதலியவற்றைக் கையாளும் முறையைக் கொண்டே மேற்குடி, கீழ்க்குடி என்று அறிந்து கொள்ளலாம். மாவட்டத்திற்கு மாவட்டம் ஒலிவேற்றுமையும் சொற்சிதைவும் இருப்பதை நாம் காணலாம். அத்துடன் இல்லாமல் சமயச் சார்பான பேச்சு வழக்கு, அருகில் அமைந்துள்ள மொழிகளுக்கேற்ப மாறும் பேச்சு வழக்கு, பிற மொழிப் பயிற்சிக்குத் தக்கவாறு மாறும் பேச்சு வழக்கு, இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவது நல்லது. ஒருவர் பேச்சை மற்றவர் கேட்கத் தூண்டும் நல்லொலி முறைகளை வானெலிமூலம் கேட்கச் செய்தல், நாளிதழ்கள் ஒழுங்கான நல்ல எளிய தூய தமிழை எழுதச் செய்தல், அவ்வாறு எழுத மறுக்கும் தாள்களையும் இதழ்களையும் ஒதுக்குதல், மக்கள் இலக்கியச் சொற்களைப் பேசவும் எழுதவும் செய்தல் ஆகியவற்றின் மூலம் மொழியை முறையாகவும் நன்கும் வளர்க்கலாம், எல்லாரும் அறியச் செய்யலாம்

தனிமனிதனின் அச்சம் போக்கிச் சமுதாயத்தோடு வாழச் செய்வதுமொழி. அத்துடன் கருத்துப்பரிமாறி நம்முணர்ச்சிகளை பிறர் அறியச் செய்வது மொழி. அன்பை, அறிவை, வெறுப்பை, இணக்கத்தை மொழி அறிவிக்கிறது. அத்துடன் பழங்கால அறிவு, பண்பாடு, வீரம், ஒழுக்கம் முதலியவற்றை அறிய உதவு

கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததையும், ஆயிரக் கணக்கான கல் தொலைவில் நடக்கும் செய்திகளையும் மொழி நமக்கு அறிவிக்கின்றது. தனிமனிதனின் கடுகுள்ளம் அறிவுக் கடலாகப் பெருகுகின்றது: பண்பாடு வளர்கிறது, இனம் தெளிவாகிறது.

மொழி அடிப்படையிலேயே நாடுகள் அமைந்திருக்கின்றன, சில அமையவில்லையென்றாலும் அப்படியமைப்பதுதான் நல்லது. உலக நாடுகளில் பல மொழிப்பெயரையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆங்கில நாடு, பிரெஞ்சு நாடு, செர்மன் நாடு, இத்தாலி நாடு, என்பவற்றைச் சான்றாகக் கொள்ளலாம். நாடு சிறிதோ, பெரிதோ தனிமொழி இருக்கவேண்டும். அரசாட்சி இருக்கவேண்டும். நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். எதிர் நாடுகளின் படையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும்.

அதனால்தான் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் தெய்வப் பற்றிற்குச் சமமாகச் சான்றோர் கருதினர்!

திருவள்ளுவ தேவர் மொழிபற்றி தனி அதிகாரம் கூறவில்லை; ஆனால் நாடு பற்றி ஓரதிகாரம் (பத்துக் குறள்) பாடியுள்ளார்.

நாடென்றால்,

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு " என்றார்.

நாட்டில் குன்றாத விளையுளைச் செய்கின்ற உழவர் இருக்க வேண்டும். கேடில்லாத செல்வர் இருக்க வேண்டும். அறிவு, பண்புநிறைந்த தக்கவர்கள் நிறைய இருக்கவேண்டும். நிறைந்த செல்வம் பிற நாட்டினருக்கு ஆசை ஊட்டும்படி அமைந்திருக்கிறது. நாட்டில் உழவால் வரும் உணவுப் பொருள், காட்டில், மலையில் கிடைக்கும் தேக்கு, மாணிக்கம், முத்து போன்ற இயற்கைப் பொருள்கள் நிறைய இருக்கின்றன.

நம் நாட்டினுள் பிற நாட்டுப் படை வருமானால் நம்நாட்டு நாற்பெரும்படை எதிர்த்துப் போரிடுகிறது, வெற்றி பெறுகிறது. நாட்டு மக்கள் அரசனுக்குக் கேட்காதபோதே இறைப் பொருளைக் கொடுக்கின்றனர்.

அரசியலைப் பழித்தலையும், நன்றி கொல்லுதலையும் நாட்டு மக்கள் பெரும்பாவமாகக் கருதுகின்றனர்.

நாட்டில்,

"*உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்*
சேரா தியல்வது நாடு" — என்ற முறையில் பசி உழவர் உழைப்பால் அகல்கின்றது. தீமையின்மையால் வெப்ப தட்பம் மாறவில்லை, அதனால் நோயில்லை, எதிரிகளோ உள்ளே வரமுடியாதபடி கடலரணும், காட்டரணும், மதிலரணும் நாற் பெரும் படையும் வலிதாயிருப்பதால் செறுபகை இல்லை. இந்த மூன்று மற்ற நாடே நாடு.

எவ்விதம் அரசன் அன்போடு, அறிவோடு, திறனோடு ஆட்சி புரிந்தாலும் சில குறைகள் வரத்தான் செய்யும். காலத்தில் மழை பெய்யாது; அல்லது அதிகமாகப் பெய்து அழிக்கும் கதிரொளி மிக வீசும். வெளி நாடுகளிலிருந்து கடல் கடந்து நோய்க் கிருமிகள் வரும். அத்துடன் குலம் பற்றியும் கடவுள் பற்றியும் ஒன்று கூடிச் சிலர் குழப்பம் விளைத்த வண்ணமே இருப்பர். சிலர் மன்னரவையில் இருந்து கொண்டே உட்பகை செய்வர். நல்ல சமயம் வரும்போது குழிபறிப்பர். குடிலனாக மாறுவர். கொள்கையற்ற அரசியல்வாதிகள் பலங்குறைந்த ஆட்சியாளர் இருக்குமிடத்தில் காவல் நிலையத்தைத் தாக்குவர். ஊரில் சென்று கொள்ளை அடிப்பர்.

இத்தகைய நிலை எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் வரும் ஆதலால் திருவள்ளுவர் நாட்டின் பெயரோ, எல்லையோ, மொழியோ, மன்னர் பெயரோ குறிப்பிடவில்லை!

ஆனால் வள்ளுவர் காலத்திலே சேர, சோழ, பாண்டியர் இருந்தனர். தமிழ், இயலிசைக் கூத்தாக விளங்கியது. மதுரையும், வஞ்சியும், பூம்புகாரும் உறையூரும் சீரோடு விளங்கின!

நாட்டில் எப்படியோ போர் வந்துவிட்டது. போரில் நாடு அழிந்துவிட்டது. என்றாலும் மக்கள் உழைப்பினால் நாட்டு வளம் குறையக் கூடாது. சான்றாக சப்பானும், செர்மனியும் உலகப்போரில் அழிந்தன. ஆனால் இன்று மற்றைய நாடுகளை விடத் தலைநிமிர்ந்து பொருளியல் துறையில் நிற்கின்றன! நாடு அழிந்த காலத்திலும் நீர்க்கிணறுகளும், ஏரியும் குளமும் இருந்

தால் மனித உழைப்பு, உணவுப் பொருளைப் படைக்கும், நாட்டில்பசி தீரும்.

நாடு வளமாக இருக்கவேண்டுமானல் நல்ல உழைப்பாளர்களும், செல்வர்களும், நோயின்மையும், நற்பொருள் விளையத் தக்க நன்செய் நிலங்களும், நல்லபாதுகாப்பும் இருக்கவேண்டும் புகார் போன்ற ஊர்கள், நலம்வேண்டி வேறூர் புகார்! அதே போலத்தான் நம்நாட்டினர் வேறு நாட்டை நாடார். ஏன்? நம்நாடு நாடாவளத்தன ஆதலினல்.

நம்நாட்டில் மலைகள் இருக்கின்றன, கடல்கள் சூழ்ந்துள்ளன, வற்ருத ஆறுகள் ஓடுகின்றன, காடுகளுக்கும் குறைவில்லை, ஆனல் மக்கள் ஏன் இலங்கைக்கும் பர்மாவிற்கும் மலேயாவிற்கும் செல்கின்றனர்? இங்கு இருக்கும் வளத்தை-நலத்தைப் பிறர் துய்க்க விட்டுவிட்டு இவர் வேறு நாடு சென்று கூலி வேலை தேடுகின்றனர்! காரணம் என்ன?

" ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு." —என்ருர்.

மன்னன் காட்சிக்கெளியனுய்க் கடுஞ்சொல் இல்லாதவனுய், படையும் குடிமக்களன்பும், உழவுத் தொழில் நாட்டமும் நல்ல அறிஞர்களை அமைச்சர்களாகவும் உலக நாடுகளை நட்பாகவும் நல்ல பாதுகாப்பு உடையவனுகவும் விளங்க வேண்டும்.

மன்னன் துணிவுடனும், கொடைக்குணத்துடனும் அறிவுடனும், ஊக்கத்துடனும் விளங்கவேண்டும்.

மேலும் கல்வியறிவுடையவனுகவும், மூறை தவருதவனுகவும், கருணையுள்ளவனுகவும் குடிமக்களிடம் அன்புடையவனுகவும் விளங்கவேண்டும்.

இக்கட்டுரையில் எது நாடு என்று கண்டோம், வள்ளுவரின் ஆழ்ந்தபுலமைக்கு இது ஒருசான்ருகும். நாடுஎனநம்நாட்டையே குறிக்கலாம். ஆனல் மன்னர் இன்றுண்டா? மன்னர் என்பது இன்றைய நிலையில் ஆட்சி புரியும் அமைச்சர் அவையே. அவ்வவை வள்ளுவர் போற்றும் குணம் ஏற்று நடப்பதாக!

கவிதையும் காலமும்

பழநி, அரங்கசாமி, M.A., B.O.L., ஆங்கிலப் பேராசிரியர்.

உணர்ச்சி வயப்பட்ட மனித உள்ளத்தின் எண்ணச் சிதறல் மொழி வடிவாக வெளிப்படுங்கால், அது கவிதையாம். எல்லா மனிதருக்கும் உணர்ச்சி உண்டு. ஆனல் உணர்ச்சிவயப் படுகின்ற மனிதர் அனைவரும் கவிஞர் அல்லர். உள்ளத்தின் உணர்ச்சியினைக் கருத்துக்குவியலாக்கி எதுகை மோனை என்னும் இருகரையினூடு மொழிச் சிறப்பினல் வரம்பு கட்டிக் காட்டு பவன் உண்மைக் கவிஞன். நீரொன்றே; அதற்கு நிறமில்லை, மணமில்லை. ஆனல் செம்புலத்தில் பெய்யின் செந்நிறமும் வெள்ளிய மண்ணில் பெய்யின் வெண்ணிறமும் கொண்டிலங்கும். கவிதையும் உலகத்தின் பொதுச் சொத்து. பாடுகின்ற கவிஞனின் உள்ளப்பாங்கிற்கேற்ப அது உருப்பெற்று ஒளிரும் தன்மையது. சார்ந்ததன் வண்ணமாதல் உயிரியல்பு என்கின்ற சித்தாந்தத்தைப் போன்று கவிஞனின் உள்ளமேயாதல் கவிதையின் இயல்பு. நீரினைக் கொண்டு நிலத்தின் இயல்பு அறியலாம். கவிதையினைக் கொண்டு கவிஞனைக் காணமுடியுமா?

“... ... ... எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தெளிந்தேன்”

என்ற வள்ளலாரின் வாக்கில் அன்பே தெய்வம் என்கின்ற அவர் தம் கொள்கையும் எம்மதமும் சம்மதமே என்கின்ற நன்னோக்கமும் வெளிப்படுகின்றன.

“சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ–பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமை அழிவீரோ”

என்ற பாரதியின் வினவில் அறிவே தெய்வம் எனக்கூறும் கவிஞனைக் காண்கிறோம். பழுமரம் தேரும் பறவையென நாடெலாம்

ஓடி வாழ்க்கையினை நகர்த்திய சங்கப் புலவனுயினும், கவிதை யினைப்பெரிதும் தனிமனிதப் புகழ்ச்சிக்கே ஈடுபடுத்திக் காதலும், உலாவும், கலம்பகமும் பாடிய இடைக்காலப் புலவனுயினும், அந்தந்தக் கவிஞனின் உள்ளம் ஆங்காங்கே தான் கொண்ட கருத்திற்கேற்றவாறு வெளிப்படுதல் உண்மைதான்.

கவிஞனின் உள்ளத்தைக் காட்டுகின்ற கவிதை காலத்தின் சாயலையும் காட்டுமா? ஆயின் எந்த அளவு என்று எண்ணிப் பார்த்தல் சற்றே இலக்கிய இன்பம் பயப்பதாகும். பொதுப் படையாகக்கூறின் கவிஞர்கள் தன்னிச்சையாகத்தான் பாடுபடு வர். காலப்போக்கினை ஒட்டியோ, வெட்டியோ வருகின்ற கருத் துக்களில் காலத்தின் சாயல் படிந்தேயாக வேண்டும். சாயலின் அளவு மிகுந்தோ குறைந்தோ காணப்படலாம். ஆனுல் காலத் தினை முற்றும் ஒதுக்கிவிடுகின்ற கவிதைகளைக் காண்பது அரிது.

பதினாறும் நூற்றாண்டில் சேக்சுபியர் இருபத்தாறே ஆண்டுகளில் முப்பத்தேழு நாடகங்கள் எழுதினர். அக்காலத்திய ஆங்கில மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி அவர்தம் கண்மூடித்தனமான நம்பிக்கைகளும் இன்ன பிறவும் அவற்றில் காணக்கிடக்கின்றன, வரலாற்றுக் கோணத்தில் அவற்றை ஆய்வோருக்கும் அவை பெரிதும் பயன்படுகின்றன. இங்கிலாந்தின் வரலாறு பயின்று நாடகத்துக்குச் சென்ருல் வரலாற்றுக்கும் நாடகத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப் பதை நாம் காண முடியும். இங்கு காலமும் கருத்தும் ஒன்றுக் கொன்று துணைபுரிகின்றன. இந்தக்கருத்து உலகப் பெருமொழி களில் காணக்கிடக்கும் பெருங்காப்பியங்களுக்கு முழுதும் ஒவ் வாது. மிக நீண்ட கதைத் தொடர்புக்கேற்பத் தன் காவிய மாளிகையினைக் கட்டுகின்ற கவிஞன் காவிய அமைப்பில்வேண்டு மானுல் மாறுதல் செய்வானேயன்றி காலத்தை அங்கு புகுத்து வதற்கோ காலம் அங்கே நுழைதற்கோ போதிய வாய்ப்பில்லை. மில்டன் தந்த பெருங்காப்பியம் சுவர்க்க நீக்கம். அங்கே மில்ட னின் பன்மொழி இலக்கிய அறிவும் பாவியல் வன்மையும்தான் அதிகம் வெளிப்படுகின்றன. அவன் வாழ்ந்த காலமாகிய பதி னேழாம் நூற்றாண்டின் சாயலைப் பெரிதும் அங்கே பார்க்கமுடிவ தில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இராம காதையிலும், கம்ப நாடனின் கற்பனைநயமும் காவிய வளமும் தான் அதிகமாக

காணமுடிகிறதேயன்றி, அற்றைத் தமிழகத்தை மிகுதியும் காண இயன்றிலது. பௌராணிகர் கொடுக்கின்ற விளக்கத்தை வைத்து இக்கூற்றின் உண்மையினைக் காண முடியாது. கோசல நாட்டை வருணிக்கும் கம்பன் தமிழ்நாட்டையே வருணிக்கிறான் என்று சிலர் கூறுவர். வரலாற்றுக் கண்ணோடு பார்க்குங்கால் அது வெறுங் கற்பனையே என்று உணரமுடியும். "உண்மை யில்லை பொய்யுரை இலாமையால்" என்பவும் பிறவும் மனதில் தோன்றிய இலட்சியக் கருத்துக்குக் காவியத்தை நிலைக் களனாகக் கவிஞன் கொண்டிருக்கிறான் என்பதைத்தான் காட்டுமேயன்றி, அக் காலத்தின் நிலையைக் காட்டுவதன்று. அதனை உலகக் காவி யங்களின் மொத்த இயல்புக்மேற்ப, கற்பனை மிகுதி என்றாலும் சரி. பா.வே. மாணிக்க நாயக்கர் கூறியாங்கு 'கம்பன் புளுகு' என்று கொண்டாலும் சரி; காவியங்களை வைத்து காலத்தின் சூழலைக் காண்பது அரிது. காவியக்கட்டுப்பாட்டினின்றும் தனித் தியங்குகின்ற கவிதையின் துணைகொண்டு காலத்தின் பிரதி பலிப்பை ஒருவாறு காணலாம்.

மொழித் திறத்தின் முட்டறுத்த சங்கச்சான்றோர் பல்லோ ரில் பெண்பாற் புலவரும் அடங்கியுள்ள உண்மையை நாம் அறி வோம்.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்று வரும் பொன்முடியார் பாடலில் தாயின் தலையாய கடன் புதல்வரைப் பெறுதல் என்பது தேற்றம். 'தந்தையொடு கல்வி போம்' என்ற பிற்றை நாட் கருத்தும் இப்புறப்பாடலை ஒட்டியே எழுந்தது போலும் தொடர்ந்து அரசனின் ஆணையும், கொல் லனின் பணியும் தான் பெற்ற மைந்தனுக்கு எம்முறையில் அமைதல் வேண்டும் என்பதனை அப்பாடலின் பிற்பகுதி விளக்கு கிறது. காலப் போக்கில் நிலைமை மாறி வருகின்றது. குழந்தை தந்தையோடு பழகுகின்ற நேரத்தினும் தாயிடம் ஊடாடுகின்ற நேரமே மிகுதி. எனவே குழந்தையின் நல்வளர்ப்புக்கும் சான் றாண்மைக்கும் தந்தையினும் தாய்க்கே பொறுப்புணர்ச்சி அதிக மென்ற கருத்தை இற்றை நாட்களில் வலியுறுத்தி வருகின்றனர். உளநூல் அறிஞர்கட்கும் இக்கருத்து உடன்பாடே. பெண் ணுலகத்தின் உரிமைக்கு முழக்கமிடும் தமிழ்க்கவிஞர்கள் பெண் களின் கடமையினையும் வலியுறுத்துகிறார்கள்.

"கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்-அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை"

என்று கூறும் புரட்சிக் கவிஞரின் கீழ்க்காணும் கருத்து ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது. ஈன்று புறந்தருதல் மட்டும் அவர்கள் கடமையல்ல; புறந்தந்த மக்களின் அகக் கண் திறத்தலும் அவர்தம் கடமை என்பதை ஈண்டு எடுத்துக் காட்டுகின்றார்.

"அவள் வாத்திச்சி! அறைவீடு கழகம்
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை
வழங்கினார் பிள்ளைகள் வேலையாயிற்றே"!

பெண்களின் கடமை மாறுவதைப் பழம்பாடலும், புதுக் கவிதையும் விளக்கிய திறத்தில் காலத்தின் கோலம் நிழலாடுவதைக் காண்க.

பதினெட்டாம் நூற்றாண்டில் சைவ சமயத் தொண்டினை இமயத் தடவரைக் கொண்டுசென்ற பெருமை குமரகுருபரரைச் சாரும். வையைத் தமிழினை வான் கங்கைவரைக்கொண்டுசென்ற அப்பெருமுனிவரின் தமிழ் தீந்தமிழ் என்றும் தெய்வத் தமிழ் என்றும் பாராட்டப்படுகிறது. அவர்தம் மதுரைக் கலம்பகத்தில் வரும் பாடலின் ஒரு பகுதி:

"பால லோசன பாநுவி லோசன
பற்ப லோசன பக்க சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்பவ னேசனே"

தமிழ்ச் சொல்லை இதில் தேடவேண்டியிருக்கிறது "வடமொழி தமிழ் மொழி எனுமிரு மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்று எண்ணுக" என்று கூறிக்கொண்டிருந்த காலமது. குருபரர் வடமொழியில் பாடல் எழுதியதில் தவறில்லை. அதனைத் தமிழ் நூலின் ஒரு பகுதியாக்கியதே விந்தை. ஆயினும், அவருக்கிருந்த தமிழ்ப்பற்றுக்கும் அளவில்லை. மதுரைத் தொன்னகரில் அம்மையும் அப்பனும் அரசன், அரசியாய் நாடாள வந்த பெருமையும் முருகப் பெருமான் உக்கிரபாண்டியனாய்ப் பிறந்ததும்

"தமிழ் மதுரம் கூட்டுணவெழுந்த வேட்கையால் எனின்
இக் கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்"

என்று தமிழின் பெருமையினைச் செம்மாந்து பாடியவர். அக்காலம் மொழி வேறுபாடுகள் தலைதூக்காத காலம். எனவே தான் வடமொழிச் சுலோகத்தையும், தமிழ்ப் பாடலையும் அவர்தம் மதுரைக் கலம்பகத்தில் ஒருங்கே காண முடிகிறது. கலம்பகம் என்றால் செய்யுள் நடையால் மாறிவருகின்ற பல்வேறு பாடல்களின் தொகுப்பு என்று பொருள். ஆனால் முற்றும் வடசொல்லானியன்ற வடமொழிப் பாடலைத் தமிழ்ப் பாடலோடு ஒருங்கிணைத்துக் கலம்பகம் என்ற சொல்லிற்குப் புதுவிளக்கம் தந்திருக்கிறார். அவருக்குப் பின்னரும் தனித் தமிழ் இயக்கம் வேரூன்றுதற்குச் சற்று முன்னரும் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை தமிழணங்கினை வாழ்த்துதல் ஈண்டு ஒப்புநோக்குதற்குரியது.

" ஆரியம் போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

என்று எதிர்மறை முகத்தான் வாழ்த்தியதோடமையாது மீண்டும் பிறப்பினாலும் தமிழ்த் தொன்மையினை வலியுறுத்தற் பொருட்டு,

" சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே."

என்று கூறித் தனது தமிழ்ப் பற்றினையும், மொழியின் தொன்மையினையும் வடமொழியினின்றும் அதனை வேறுபடுத்திக் காண்பதில்தான் கொண்ட பேருவகையினையும் வெளிப்படுத்துகிறார், இவ்விரு மேற்கோள்களில் இருந்தும் நமக்குப் புலனாவது ஒன்று மொழி வேறுபாடில்லாத காலத்தைக் குருபரரும் தனித்தமிழை உயிர்ப்பிப்பதன் மூலமே தமிழின் பெருமையும் தனித்தன்மையும் விளங்கும் என்று கருதத் தொடங்கிய தனித் தமிழ் இயக்கத் தோற்றுவாயினைச் சுந்தரம் பிள்ளை அவர்களும் தெளிவுறுத்துகின்றனர் என்பதேயாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சேதுபதி விறலிவிடு தூது சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் இயற்றியது. இச்சிற்றிலக்கியத்தில் வருகின்ற அவதானி ஐயன் ஒரு பெருஞ் செல்வந்தன். மோகன முத்து என்ற கயல்விழியாளின் மையலுக்குட்பட்டு பொருளையெல்லாம் பறிகொடுத்தான். புத்தி வந்த

பின்னாலே தான்செய்த மன்மத லீலைகளை எண்ணி மனம் புழுங்கி னான்.

" சண்டாளிக்கிட்ட தனத்தையெல்லாம் ஒரு
சத்திரந்தான் கட்டி வைத்தேனா"

என்றான். பொருளை நல்வழியிலே செலவழிக்க வேண்டும் என்று எண்ணியவர்கள் சாவடியும் சத்திரமும் கட்டிக் கொண்டிருந்த காலத்தை இம்மேற்கோள் வெளிப்படுத்துகிறது. நாம் வாழு கின்ற தற்காலமோ இத்தகு எண்ணத்திற்கெல்லாம் தலைகீழாக நிற்கிறது. தான் வலியுறுத்துகின்ற எந்தக் கருத்தினையும் சூடா கவே சொல்லிப் பழக்கப்பட்ட கவிஞர் ஒருவர்,

" ... ... கொடுந்தடியர்க்கு
மடம் கட்டி வைத்ததனாலேயே தம்பி வசம்கெட்டுப்
போனது நமது நன்னாடு"

என்றார். பாரதியும் இக்கருத்தை வலியுறுத்துகின்ற வகையில் ஒரு ஏழைக்குக் கல்வி கற்பித்தல் சத்திரம் கட்டுவதினும் சால்பு டையதாம் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
— — — — —
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

காலத்தை எட்டிக் கற்பனையை ஓட்டுகின்ற கவிஞரை மரபு வழிக் கவிஞர் என்று குறிப்பிடலாம். அவர் தம் கவிதையும் மரபு வழிக் கவிதையாகும். காலத்தை எதிர்த்துச் சமுதாயத் தின் சிறப்பியல்பைப் போற்றியும், சிறுமைகளைத் தூற்றியும் பாடுகின்ற புதுமைக் கவிஞர்களின் இற்றைக்காலக் கவிதைகளை மறுமலர்ச்சிக் கவிதை என்று கூறலாம். ஆனால் எந்தக் கவிதை யாக இருப்பினும் தான் பிறந்த காலத்தின் சாயலிலிருந்து அது தனித்தியங்க முடியாது என்பதை மேலே காட்டிய மூவகைச் சான்றுகளிலிருந்தும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

செத்துங் கொடை கொடுத்த சேதுபதி

செஞ்சொற்பாவலர் : ப. சங்கரலிங்கம்

கற்கோயில் கண்ட தாலே
　　கவின்பெற்றான் நம்மா மல்லன்!
விற்கோயில் தன்னால் என்றும்
　　விறல்பெற்றான் சேர வேந்தன்!
சொற்கோயில் சமைத்த தாலே
　　சீர்பெற்றான் இளங்கோ அண்ணல்!
பொற்கொடைக் கோயில் தன்னால்
　　புகழ்பெற்றார் சேது மன்னர்!

தெள்ளிய அறிவின் தேக்கம்!
　　திருமுறை ஆயும் செம்மல்!
பல்கலைக் குரிசில்! தெய்வப்
　　பாசுகர சேது வேந்தன்!
ஒள்ளிய தமிழில் வல்லோர்
　　உயர்கலை வாணர்க் கெல்லாம்
அள்ளியே தருவன்; அந்தோ!
　　அருங்காரி மாரி தோற்க!

தென்னம்நல் பாளை யைப்போல்
　　திருமலி வாயில் என்றும்
புன்னகை புரிவன்! ஆழ்ந்த
　　புலமைசால் வாழ்வு மிக்கோன்!

தென்னாட்டுச் சிவனின் அன்பன்
திருநீறு தவழும் மெய்யன்!
என்னாடும் போற்றும் நீல
எழில்வானம் போன்ற நெஞ்சன்!

செயல்மிகு மூவேந் தர்போல்
செம்மைசால் அறங்கள் போற்றி
இயலிசை வல்லோர்க் கெல்லாம்
இமயம்போல் கொடுத்து நாளும்
இயலிசை நாட கத்தை
ஆய்வன்நல் தேனீப் போல!
வயலென சங்கம் பேணி
உழவன்போல் தமிழ்வ ளர்ப்பன்!

பண்டையத் தமிழர் தம்மின்
பண்பாட்டுத் தொட்டில்! அந்தப்
பண்பாடும் கலையின் ஊற்றைப்
பேணிட ஊர்கள்! தேர்கள்!
பொன்னணி பொருட்கு வைகள்!
புகழ்ப்பணி தெய்வத் தொண்டை
இந்நாட்டின் வரலாற்றேடே
இதுகாறும் கண்ட தில்லை!

தெளிந்தநல் அறிவில் கங்கை!
தீரர்நம் விவேகா நந்தர்!
வெளியுல கறியாப் போழ்தில்
எதிர்வினை அறியும் நோக்கால்

ஒளிமிகும் செல்வந் தந்தே
    உயர்ந்து நெறியை ஆண்டே
தெளிவுடை ஓவி யம்போல்
    வரைந்திடச் செய்தான் சான்றேன்!

தாயகந் திரும்புங் காலே
    தாய்கண்ட சேயைப் போல!
தோய்ந்திட அடிகள் தானே
    துலங்கும்தன் முடியின் மீதே!
மாய்ந்திடா வெற்றித் தூணை
    மண்மீதில் நாட்டித் தேரில்
சாய்ந்திட : அடிகள் : தன்னைத்
    தெய்வம்போல் உவந்தி முத்தான் !

"இந்துநல் சமயந் தன்னின்
    ஏற்றத்தை உலக ரங்கில்
என்றனுல் இயம்பச் செய்தே
    ஏறுபோல் திரும்பி நின்ற
என்றனின் வெற்றி யெல்லாம்
    எழில்சேது மன்னர்க் கென்றும்
இந்தியா நன்றி என்றும்
    தங்கட்கே செலுத்து" மென்ருர்!

கல்லிடைக் குறிச்சி என்னும்
    கற்றவர் சூழும் மன்றில்
நல்லதோர் அறிவின் ஆசான்
    நறுஞ்சைவ அடியார் காண

ஒல்லையில் சென்ருன் ஆண்டே
　　உயர்புகழ் சேது வேந்தன்
நல்லன தழைக்க வாழ்ந்த
　　நல்லோனை நமனே நண்ண

முத்தமிழ்த் தாகந் தீர்க்க
　　மோகன ராகந் தன்னை
முத்தையா இசையில் வல்ல
　　மூதறிஞர் பாடக் கேட்டு
சித்தமும் செயலும் ஒன்றி
　　செய்வது மறந்து நின்று
புத்தர்போல் உருகி யுள்ளம்
　　ஒண்டமிழ்த் தேனை யுண்டார்!

இத்தரை தன்னில் ஈடே
　　இல்லாத தமிழி சையை
மெத்தவே விரும்பி மெய்யில்
　　மின்னல்போல் ஒளியைச் சிந்தும்
முத்துநல் வைர மாலை
　　மதிப்பிலா செல்வந் தன்னை
செத்துந்தான் கொடை கொடுத்தார்!
　　செந்தமிழ்ச் சேது வேந்தர்!

‘அல்லது’ தொடரன் அமைப்பு முறை[1]

கோ. சுப்பையா, மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

நாம் பேசும் மொழியில் காணும் தொடரன் (Sentences) களைத் ‘தனித் தொடரன்’ (Simple sentence), பின்னல் தொடரன் (Complex sentence), இணைத் தொடரன் (Co-ordinative sentence) என மூவகையாகப் பகுக்கலாம். புற அமைப்பில் (Surface structure) பின்னல் தொடரன் தன்னகத்தே தலைமைத் தொடரனை (Main clause) யும் சார்புத் தொடரனை (Subordinate clause) யும் கொண்டுள்ளது. ஆனால் அக அமைப்பில் (Deep structure) சார்புத் தொடரன் தனித் தொடரனாக அமைந்து, வினைத்தொடரின் (Verb phrase) பகுதியாகிய வினையடை (Adverb)யின் கீழ்க்காணப் படுகிறது. இரு தனித் தொடரன்கள் சேர்ந்து ஒரு பொது உண்மை (Common topic) யைத் தனித் தன்மை (Equal status) கெடாமல் அமைகின்ற தொடரனை வினைத் தொடரன் என்று கூறலாம்.

தமிழ் மொழியில் ‘அல்லது’ எனும் சொல் தொடரன் அமைப்புப் (Syntactic Structure)படி, மூன்று பணிகளைக் (function) கொண்டுள்ளது. அவைகளாவன: நிபந்தனைத் தொடர் (Conditional Adverbial); ‘தவிர’ தொடர் (Except Adverbial); இரண்டிலொன்று தொடர் (Either .. or phrase) என்பனவாகும். புறத் தோற்றத்தில் ‘அல்லது’ தொடரன் இணைத்தொடரன் போன்று காணப்படுகிறது. ஆனால் உண்மை அவ்வாறு இல்லை அல்லது

1. இக்கட்டுரையை எழுதும்போது, கருத்துப் பரிமாற்றத்தில் பெரிதும் துணைபுரிந்த மொழியியல் துறை ஆய்வாளர், நண்பர் திரு. இரா. கோதண்டராமன் அவர்களுக்கு மிக்க நன்றியுடையவனாவேன். இக் கட்டுரையின் ஒரு பகுதி, மொழியியல் துறை ஆராய்ச்சியாளர் குழுவில் படிக்கப் பெற்றது.

தொடரனின் அக அமைப்பைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் உட்கருத்தாகும்.

கீழ்வரும் தொடரன்களை ஆராய்ந்தால், மேலே சொன்ன உண்மைகளை விளக்கலாம்.

1. கண்ணனோ முருகனோ வருவான்.
2. கமலாவாவது ராஜியாவது எழுதுவாள்.
3. கண்ணனோ அல்லது முருகனோ வருவான்
4. கமலாவாவது அல்லது ராஜியாவது எழுதுவாள்.
5. கம்பட்டன் அல்லது மல்லன் பேசுவான்.
6. மாதி ஆடுவாள் அல்லது பாடுவாள்.
7. நான் இதை அல்லது அதைச் செய்வேன்.

மேலே குறிக்கப்பெற்றவற்றுள் காணப்படும் முதலிரண்டு தொடரன்களையும் முறையே மூன்று மற்றும் நான்காம் தொடரன்களிலிருந்து பெறலாம். முன்னவை இரண்டும் பின்னவை இரண்டின் தொகுத்தல் விகாரங்களாகத் துணியலாம். மேலுள்ள ஏழு தொடரன்களைத் தொடர்பில் இணைத் தொடரன் (Non-correlative Co-ordinative)களாகக் கருதுவர். ஆனால் இக் கருத்து மேலும் ஆராய்வதற்குரிய தொன்றாகும். தற்போழ்து உள்ள ஆய்வின்படி மேலேயுள்ள தொடரன்களைக் கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.



2. தொ: தொடரன்; இ.உ.: இணை உருபு (Co-ordinator); பெ.: பெயர்; வி.: வினை; வி.அ.தொ.: வினையடைத்தொடர் (Adverbial phrase); நி.தொ.: நிபந்தனைத் தொடர் (Conditional phrase); எ.நி.: எதிர்மறை நிபந்தனை (Negative Conditional). பெ.தொ.: பெயர்த்தொடர் (Noun phrase); வி.தொ.: வினைத் தொடர் (Verb phrase); ப.தொ.: பயனிலைத் தொடர் (Predicate phrase).

ஆனால் இக்கட்டுரையாளரின் கருத்துப்படி மேற்கண்ட வரைபடம் கீழ்வருமாறு இருக்கும்.



8. பாண்டியன் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க் கிழமை போவான் எனும் தொடரனில் 'அல்லது' "பாண்டியன் திங்கட்கிழமை போவான்; திங்கட்கிழமை போகவில்லையெனில் செவ்வாய்க்கிழமை போவான்" என 'இரண்டிலொன்று' என்ற பொருளை உணர்த்துகிறது. ஆனால் சில தொடரன்களில் இத் தன்மை தெளிவாகக் குறிக்கப்படவில்லை. இலக்கிய வழக்கில் (literary dialect) இத் தெளிவில்லாமையை 'விட்டொலித்தல்' தன்மை (juncture) யையும் ஒலி வெற்றிடத் தன்மை (pause)யை யும் புகுத்தி பொருள் மாறுபடக்கூறி, இருபொருளுள்ள தொட ரன்களை வெவ்வேறாகப் பிரித்துக் காணலாம். ஆனால் இவ்விரு தொடரன்களுக்கும் அக அமைப்புத் தொடரன் யாதென்பது ஒரு கேள்விக்குறியாகும்.

என் ஆய்வின்படி மூன்றிலிருந்து ஏழுவரையுள்ள தொட ரன்கள் இணைத் தொடரன்களல்ல என்பதேயாகும். இவைகளை அக அமைப்பில் வேறு அடிப்படையிலிருந்து கொணரலாம் என் பதை இக் கட்டுரையில் விளக்க முயல்கிறேன். பேச்சு வழக்கில் காணும் 'இல்லே' தொடரன்களை எடுத்து இங்கு ஆராய்ந்து நோக்கி, ஒப்பிட்டால் உண்மை விளங்கப் பெறும்.

9. கண்ணன் இல்லே கமலா பாடுவாள்.

10. கண்ணன் இல்லேண்ணா கமலா பாடுவாள்.

11. கண்ணன் பாடல்லேண்ணா கமலா பாடுவாள்.

இம்மூன்றுதொடரன்களும் ஒரே பொருளைத்தான் உணர்த் துகின்றன. ஒன்பதாம் தொடரனைப் பதினொன்றாம் தொடரனி லிருந்துபத்தாம்தொடரன் வழியாகக்காணலாம். பதினொன்றாம்

தொடரன் நிபந்தனைத் தொடரன் என்பது தெளிவு. இந் நிலையில் மேலேயுள்ள தொடரனை வரைபடம்மூலம் கீழ்க்காணு மாறு சித்தரிக்கலாம்.



12. கண்ணன் அல்லது கமலா பாடுவாள் எனும் தொடரனைப் பேச்சு வழக்கில் காணும் ஒன்பதாம் தொடரனுடன் ஒப்பிடலாம். ஏனெனில் பொருளியல் (Semantics) அமைப்பில் இரு தொடரன்களிலுள்ள 'இல்லை', 'அல்லது' என்பன ஒரே பொருளான 'நிபந்தனை' யைத்தான் குறிக்கின்றன.

ஒரு நிபந்தனைத் தொடரனில் வினையானது. தலைமைத் தொடரனிலுள்ள பெயருடன் பால் இன எண்ணும்மை (concord) யைக் கொண்டிருக்கும். இத்தன்மை 'அல்லது' தொடரனிலும் காணலாம். மேலும் நிபந்தனைத் தொடரனில் வரும் வினைமுற்று (finite verb) எதிர்காலத்தைத்தான் கொண்டிருக்கும். இதுபோல் 'அல்லது' தொடரனிலுள்ள வினைமுற்றும் எதிர்காலத்தைத்தான் கொண்டுள்ளது. ஆனால் இணைத் தொடரனில் வரும் வினைமுற்று எல்லாக் காலத்திலும், தொடரன்கள் இணையும் முறையைக் குறித்துப் பால் இன எண்ணும்மையும் அமையும்.

'அல்லது' தொடரன் இணைத்தொடரன் என்று கருதினால், கீழ்க்காணும் தொடரன்களின் அக அமைப்பு யாதென்னும் கேள்வி எழுகிறது.

13 அதிகாரிகள் கவனிக்கவில்லை அல்லது கவனிக்காதது போல் இருந்துவிட்டனர்.

14 மாரி அல்லது காரியம் இல்லை.

15 வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி
(தொல், பொருள். மரபு 80)

16 எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்
(தொல். சொல். கிளவி, 35)

மேலேயுள்ள தொடரன்களில் அல்லது பதின்மூன்றில் 'இரண்டிலொன்று எனும்பொருளையும், பதினன்கில் நிபந்தனைப் பொருளையும் பதினைந்து மற்றும் பதினாறில் 'தவிர' எனும் பொருளையும் குறித்துநிற்கிறது. இத்தொடரன்களுக்கு அக அமைப்புத் தெரிந்துவிட்டால், 'அல்லது' தொடரனின் உண்மையான பணி யாதென்று தெளிவாகிவிடும்

உதவிய நூல்கள் :

1 தொல்காப்பியம் : சொல்லதிகாரம்-சேனாவரையம்

2 ,, : பொருளதிகாரம்-இளம்பூரணர்

3 Robin Lakoff : If's, And's, And But's about Conjunction — Studies in Linguistic Semantics-Charles. I. Fillmore & D. T. Langendoen, 1971.

4 Andreas Koutsoudas : Gapping, Conjunction Reduction and Co-ordinate Delition—Foundations of Language, Vol. 7 No.3, 1971.

மொழியியல் கலைச்சொல் விளக்கம் - 6.

சு. இராசாராம், எம். ஏ.
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்.

Contrastive Linguistics - ஒப்புமை மொழியியல்

ஒரு மொழியை அன்னிய மொழியாகக் கற்பதிலும் கற்பிப்பதிலும் இன்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இம்மாற்றங்களுக்கு மொழியியலின் வளர்ச்சியே முக்கிய காரணம். மொழியை ஆராய்கின்ற மொழியியல் கோட்பாடுகளும் உத்திகளும் மொழியைக் கற்பதில் புதுமையையும் எளிமையையும் புகுத்தின. ஒரு மொழியைக் கற்பது என்பது அம்மொழியின் இலக்கியங்களையும் இலக்கணத்தையும் கற்பது என்ற பழைய வேதாந்தம் மறைந்து அறிவியல் உணர்வோடு இன்று மொழி கற்கப்படுகிறது – கற்பிக்கப்படுகிறது.

1957-ஆம் ஆண்டு இரசியா விண்வெளிக் கப்பலை (Sputnic) வானமண்டலத்திற்கு அனுப்பியது. இரசியரின் இக்கண்டுபிடிப்பு உலக மக்களைக் கவர்ந்தது. குறிப்பாக அமெரிக்க விஞ்ஞானிகள் இரசியரின் வியக்கத்தக்க விஞ்ஞான வளர்ச்சியில் அக்கறை கொள்ள ஆரம்பித்தனர். இரசிய விஞ்ஞானிகளின் அறிவியல் கருத்துக்கள் இரசிய மொழியிலேயே எழுதப்பட்டு வந்ததால் அம்மொழியைப் படிக்க வேண்டிய அவசியத்தையும் அமெரிக்கர் உணர்ந்தனர். இதன் விளைவாக அமெரிக்காவில் பல இடங்களிலும் இரசிய மொழியை அன்னிய மொழியாகக் கற்பிக்கப் பல நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதற்குமுன் அன்னியமொழிகள் பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்பட்டு வந்த போதிலும் அன்னிய மொழியில் ஒருவர்க்குரிய பயிற்சி அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம், உலகமெங்கும் பேசப்படுகின்ற ஆங்கிலமொழி அமெரிக்கருக்குத் தாய்மொழியாக இருப்பதே எனலாம். மேலும் விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் உலகத்தில் பல மொழி பேசுகின்ற விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்புகளாக இருந்தும் எல்லாக் கருத்துக்களையும் தெரிவிக்கும் பொதுமொழி

யாக ஆங்கிலம் எடுத்தாளப்பட்டது. இவ்விரு காரணங்களால் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அன்னியமொழியைக் கற்பதின் அவசியத்தை அமெரிக்கா உணராமல் இருந்தது.

இரசிய மொழியைக் கற்பிக்கப் பலநிறுவனங்களை ஏற்படுத்தியதோடு அம்மொழியை எளிதாகவும் விரைவாகவும் கற்பிக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்கர்கள் உணர்ந்தனர். இதனால், இரசியா மொழியில் பாடங்களை வகுக்கும் முறையில் மாற்றத்தை விரும்பினர். இதன் விளைவாக. மொழியியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல பாடப் புத்தகங்கள் எழுதப்பட்டதோடு கற்பிக்கின்ற முறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

பொதுவாக, ஒரு மொழியைக் கற்க ஆரம்பிக்கும்போது அம்மொழியைத் தாய்மொழியாக உடையவர்கள் எவ்வாறு அம் மொழியை உச்சரித்து உரையாடுகிறார்களோ அதைப் போலவே ஒலிகளை உச்சரித்து இலக்கணப் பிழையில்லாமல் உரையாட வேண்டும் என்று விரும்புவது இயல்பு. இம் முயற்சிக்குச் சில வேளைகளில் நம்முடைய தாய் மொழியே தடையாக இருப்பதுண்டு. அன்னிய மொழியைக் கற்பதில் தாய் மொழியின் ஊடுருவல் தடுக்க முடியாத ஒன்று. இவ்வூடுருவல் நம்மையும் அறியாமலேயே நடக்கிறது என்றும் கூறலாம். இவ்வூடுருவலின் காரணமாக ஒரு குறிப்பிட்ட ஒலியோ அல்லது மொழியமைப்போ மிகவும் வேறுபட்டதுபோல்தோன்றினாலும் அவற்றோடு தொடர்புடையதும் தாய் மொழியில் வழங்குவதுமாகிய ஒலியோடோ இலக்கண அமைப்போடோ இனங் கண்டுகொள்ளப்பட்டு கற்பவர் தவறிழைக்க நேரிடுகிறது. இத்தகைய தவறுகள் மொழியைக் கற்கும்போது ஏற்படாமல் தடுக்கவோ அல்லது ஏற்பட்டுவிட்ட தவறுகளைத் திருத்தவோ, கற்கின்றவரின் தாய் மொழியைப் பற்றிய அறிவு இன்றியமையாதது. இவ்வறிவாற்றலாலேயே கற்கின்றவர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தவறு செய்கிறார் என்பதையும் அத் தவறை நீக்கும் வகையில் பாடங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியும். சுருங்கக் கூறின், பாடங்களை உருவாக்கும்போதும் வகுப்பறையில் கற்கின்றவர் தவறு செய்யும்போதும் இருமொழிகளைப்பற்றிய அறிவு இன்றியமையாதது இதனை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததே ஒப்புமை மொழியியல் (Contrastive Linguistics).

'ஒப்புமை மொழியியல்' என்னும்போது மொழிவரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பல மொழிகளை ஆராயும் முறையை யும், அன்னிய மொழியாக ஒரு மொழியைக் கற்கும் சூழ்நிலையில் கற்பிக்கப்படுகின்ற மொழியையும், கற்கின்றவரின் தாய்மொழி யையும் ஆராய்கின்ற முறையையும், குறிப்பிடுகின்ற ஒரு பொது வான கலைச் சொல்லாக நாம் நினைக்கலாம். ஆனால், இவ்விரண்டு ஆய்வு முறைகளின் குறிக்கோள்கள் முற்றிலும் வேறுபாடு உடையன என்பதோடு முந்தியது வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதும் பிந்தியது முந்திய முறையினின்றும் முற் றிலும் முரண்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது முறையில் ஒப்பிடப்படுகின்ற இரு மொழிகளின் வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இடமில்லை. மேலும், முந்திய ஒரே குடும் பத்திலுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகள் ஆராயப்படுகின் றன. ஆனால் பிந்திய முறையிலோ எந்த இரு மொழிகளும் ஆராயப்படலாம். தென் திராவிட மொழிகளில் ஒன்றான தமி ழைத் தாய் மொழியாக உடைய ஒருவர் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்திலுள்ள இந்திமொழியைக் கற்கும்போது என்னென்ன பிரச்சினைகள் எழுகின்றன என்பதைத் தமிழோடு ஒப்பிட்டு ஆராயலாம்.

வரலாற்றின் அடிப்படையில் ஒரே மொழிக் குடும்பத்தி லுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளை ஆராயும் முறையை 'Comparative linguistics' என்று வழங்கினர். 'Historical Comparative Linguistics' என்பதின் சுருக்கம் இது. 'Comparative Linguistics' என்பதற்கு வரலாற்றின் அடிப்படையில் ஒரே குடும்பத்திலுள்ள பல மொழிகளை ஆராய்வது என்பதே பொருளாகக் கொள்ளப் பட்டது. அன்னிய மொழியைக் கற்பிக்கும் முறையில் மாற்றங் கள் ஏற்பட்டு அன்னிய மொழியையும் கற்கின்றவரின் தாய் மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்தபோது 'Comparative Linguistics' என்ற கலைச்சொல் எந்த ஆராய்ச்சி முறையைக் குறிப்பிடுகிறது என்ற குழப்பம் உண்டாயிற்று, இதனால் முந்திய ஆராய்ச்சி முறையினின்றும் பிந்தியதை வேறுபடுத்த 'Descriptive Comparative Linguistics' என்ற கலைச்சொல்லை எடுத்தாண்டனர். பின்னர் இவ்வாய்வு முறை மொழியியல் 'Contrastive Linguistics' என்று பெயர் பெற்றது. தமிழிலும், பொதுவாக 'ஒப்புமை மொழி யியல்' என்பது நாம் குறிப்பிட்ட முந்திய முறையையே குறிப்பிட

தமிழ் மொழியியல் அறிஞர்கள் கையாண்டு வந்தனர். ஆங்கிலத்தில் ஏற்பட்ட கலைச் சொல் மாற்றத்தின் அவசியத்தை மனதில் கொண்டு முந்திய முறையை 'வரலாற்று ஒப்புமை மொழியியல்' (Historical Comparative Linguistics' என்றும் பிந்தியதை 'ஒப்புமை மொழியியல்' (Contrastive Linguistics) என்றும் குறிப்பிடுவோம்.

முன்னர்க் குறிப்பிட்டதுபோல் ஒப்புமை மொழியியலில் கற்பிக்கப்படுகின்ற மொழியின் மொழியமைப்புகளும் கற்பவரின் தாய் மொழியின்மொழியமைப்புக்களும்ஒப்புநோக்கி ஆராயப்படுகின்றன. எந்த மொழியமைப்பில் கற்பவருக்குப் பிரச்சினைகளும் கஷ்டங்களும் எழுகின்றனவோ அவற்றை நீக்கும் வகையில் பாடங்களை வகுக்கவோ, வகுப்பறையில் கற்பிக்கவோ முடியும். எனவே, அன்னிய மொழியைக் கற்பிப்பதில் ஒப்புமை மொழியியலின் பங்கு முக்கியமானதாகும்.

எடுத்துக்காட்டாக, இந்தி மொழியைத் தாய் மொழியாக உடைய ஒருவருக்குத் தமிழை அன்னிய மொழியாகக் கற்பிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். சில அடிப்படையான மொழியமைப்புகளைக் (Linguistic Structures) கற்பித்தபின் வேற்றுமையைக் (Case) கற்பிக்கவேண்டும். எல்லா மொழிகளின் மொழியமைப்புக்களிலும் வேற்றுமை ஒரு முக்கியமான மொழியமைப்பு எனலாம். ஓரளவிற்கு எல்லா மொழிகளிலும் வழங்கும் இவ் வேற்றுமைகள் மொழியில் செயல்படும் முறையில் நாம் ஓர் ஒற்றுமையைக் காண்கிறோம். வேற்றுமை உருபுகள் பல வாறாக இருந்தாலும் மொழிகளில் அவை வந்து வழங்கும்பொருளில் ஒற்றுமையைக் காண முடியும். இந்தி மொழியிலும் வேற்றுமைக்கு முக்கிய இடம் உண்டு. தமிழில் வழங்குகின்ற வேற்றுமை உருபுகள்போல் இந்தி மொழியிலும் பல வழங்குகின்றன. சில வேற்றுமைகள் தமிழிலுள்ள வேற்றுமைகள்போல் செயல்படுகின்றன. எனவே, பொதுவாக வேற்றுமைப் பகுதி தமிழை அன்னியமொழியாகக் கற்கின்ற இந்தி மொழிக்காரருக்குக் கடினமாக இருப்பதில்லை, இருந்தபோதிலும் இவ்வொற்றுமையினிடையே காணப்படும் சிறிய வேறுபாடுகள், சிலவேளைகளில் கற்பிக்கின்றவருக்கும் கற்கின்றவருக்கும் பெரிய பிரச்னைகளைக் கிளப்பிவிடுகின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழிலுள்ள இரண்டாம் வேற்றுமையையும் நான்காம் வேற்றுமையையும் பார்க்கலாம்.

1) நான் அவனைப் பார்த்தேன்.

2) நான் அப்பாவுக்குக் கொடுத்தேன்.

என்பவை தமிழ்ச் சொற்றொடர்கள். இவற்றுள் முதல் சொற்றொடரில் இரண்டாம் வேற்றுமையும் (அவனை) இரண்டாவது சொற்றொடரில் நான்காம் வேற்றுமையும் (அவனுக்கு) இரண்டு வேறுபட்ட வேற்றுமை உருபுகளால் காட்டப்படுகின்றன. இவ்விரண்டு வேற்றுமைகளிடையேஉள்ள வேறுபாட்டைக்கற்பித்த பின்னர், 'நான் அவனுக்கு பார்த்தேன்' என்றும், 'நான் அப்பாவைக் கொடுத்தேன்' என்றும் பிழையுள்ள சொற்றொடர்கள் இந்தி மொழி பேசுகின்றவருடைய பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறுகின்றன. இதற்கு என்ன காரணம்?

இரண்டாம் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையும் இந்தி மொழியில் செயல்படும் முறையில் மாறுபாடு இருப்பினும் இரண்டின் உருபுகளும் ஒலி வடிவில் ஒன்றே. மேலே கொடுக்கப்பட்ட இரண்டு தமிழ்ச் சொற்றொடர்களையும் இந்தி மொழியில் மொழிபெயர்த்தால் இரண்டு வேற்றுமைகளின் உருபுகளும் ஒலி வடிவில் ஒன்றாய் இருப்பதை அறியலாம்.

(3) Mainee uskoo deekhaa

(4) Mainee pitaajikoo diyaa

koo என்ற வேற்றுமை உருபே இரண்டாம் வேற்றுமைக்கும் நான்காம் வேற்றுமைக்கும் இந்தி மொழியில் உபயோகப் படுத்தப்படுகிறது. இதன் பொருள் koo என்ற ஒலி வடிவம் இந்தி மொழியில் இரண்டாம் வேற்றுமை உருபாகவும் செயல் படுகிறது என்பது அன்று. ஒலி வடிவம் ஒன்றே தவிர அது உணர்த்தும் பொருளில் எந்தவித ஒற்றுமையும் இல்லை. எனவே இவ்வேற்றுமை உருபை koo_1 என்றும் koo_2 என்றும் பிரித்துக் காட்டலாம். koo_1 இரண்டாம் வேற்றுமை உருபு. koo_2 நான்காம் வேற்றுமை உருபு. தமிழிலோ இரண்டு வேற்றுமைகளுக்கும் வேறுபட்ட வேற்றுமை உருபுகள் இருக்கின்றன. இவற்றிடையேயுள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்வதற்கு முன்னர் இரண்டாம் வேற்றுமை உருபையோ நான்காம் வேற்றுமை உருபையோ இரண்டு வேற்றுமைகளுக்கும் பொதுவாக உபயோ

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41

இக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இதனாலேயே மேற்கூறிய இலக்கணப் பிழையுள்ள சொற்றொடர்கள் கற்கின்றவரின் தமிழில் இடம் பெறுகின்றன.

அன்னிய மொழியாக ஒரு மொழியை ஒருவர் வகுப்பறையில் கற்கும்போது அன்னிய மொழிச் சூழ்நிலையில் ஒன்றிப்போய் விடுகிறாரென்று நாம் நினைக்கிறோம். இது ஓரளவிற்கு உண்மை என்றாலும் அன்னிய மொழிகளின் எல்லா மொழியமைப்புக்களையும் தன் தாய்மொழியின் மொழியமைப்புக்களோடு இனங்கண்டு கொள்கின்ற ஒரு முயற்சி கற்கின்றவரை அறியாமலேயே நடைபெறுகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. அதாவது ஒரு மொழியைக் கற்கும்போது தன்னுடைய மொழிச் சூழலிலிருந்து முழுவதுமாக விடுபட்டு ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்ள முடியாது. அன்னிய மொழியில் தாய்மொழியின் இந்த ஊடுருவலைத்தான் மொழி ஊடுருவல் (Language Interference) என்கிறார்கள். அன்னிய மொழிப் பயிற்சியில் இவ்வூடுருவல் தடுக்க முடியாத ஒன்று.

இம் மொழி ஊடுருவல் எல்லா மொழியமைப்புக்களிலும் ஏற்பட்டு விடுவதில்லை. இரண்டு மொழிகளின் மொழியமைப்புக்களும் ஒன்றாக இருக்குமாயின் இம்மொழி ஊடுருவல் ஏற்பட வாய்ப்பு இருக்காது. மொழியமைப்புக்கள் முற்றிலும் வேறுபட்டவைகளாய் இருக்குமானால் ஒரு புதிய மொழியமைப்பைக் கற்கின்ற உணர்வுமட்டுமே இருக்கும். எல்லா வகையிலும் தொடர்புடைய இரண்டு மொழிகளின் மொழியமைப்பிடையே காணப்படும் சிறிய வேறுபாடே மொழி ஊடுவலுக்குக் காரணமாகிறது எனலாம். இது ஒலியனியல் அமைப்பிலோ (Phonemic Structure) இலக்கண அமைப்பிலோ (Grammatical Structure) இருக்கலாம். எடுத்துக் காட்டாக, தமிழில் காணப்படும் (ḷ) என்ற ஒலிக்கு இணையான ஒலி இந்தி மொழியில் இல்லை. அதனால், தமிழை அன்னிய மொழியாகக் கற்கும்போது (ḷ) வரும் இடங்களிலெல்லாம் (l) வாகவே உச்சரிக்கப்படுகிறது. (ḷ) என்ற ஒலி (ṛ) வாகவோ அல்லது (r) வாகவோ உச்சரிக்கப்படுவதில்லை. ஏனெனில், தமிழிலுள்ள (ḷ)விற்கும் இந்தியிலுள்ள (l)விற்குமிடையே உள்ள நுண்ணிய வேறுபாடு அவ்வளவு எளிதாகப் புரிவதில்லை.

இதற்கு இரண்டு ஒலிகளிடையே காணப்படும் ஒற்றுமையே முக்கிய காரணம். எனவே, மொழியில் ஊடுருவல் இருமொழி களின் மொழியமைப்புக்களிடையே காணப்படும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது.[1]

மேற்கூறிய இரண்டு சொற்றொடர்களிலும் மொழி ஊடுருவல் மூன்று முறைகளில் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

(3a) நான் அவன் [A] பார்த்தேன்

(3b) நான் அப்பா (A) பார்த்தேன்

(4a) நான் அவன் (B) பார்த்தேன்

(4b) நான் அப்பா (B) கொடுத்தேன்

(5a) நான் அவன் (B) பார்த்தேன்

(5b) நான் அப்பா (A) கொடுத்தேன்

A இரண்டாம் வேற்றுமை உருபையும் B நான்காம் வேற்றுமை உருபையும் குறிப்பிடுகின்றன. இம்மொழி ஊடுருவலின் விளைவாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள் கற்கின்றவரின் தமிழில் இடம் பெறுகின்றன.

(3a) நான் அவன் (ஐ) பார்த்தேன்

(3b) *நான் அப்பா (ஐ) கொடுத்தேன்

(4a) *நான் அவன் (கு) பார்த்தேன்

(4b) நான் அப்பா (கு) கொடுத்தேன்

(5a) *நான் அவன் (கு) பார்த்தேன்

(5b) *நான் அப்பா (ஐ) கொடுத்தேன்

* குறியிட்ட சொற்கள் இலக்கணப் பிழையுள்ள சொற்றொடர்கள்.

(தொடரும்)

1 . . . . Progressive selection among categories and items in the target language that are recognized on contextual criteria as equivalent to categories and items in the source language, each category and item having a set of probability. Halliday M.A.K. and others. (1965).

பள்ளு நாடகங்கள்.

பூ. சொல்விளங்கும் பெருமாள், M. A.,
தமிழ்ப் பேராசிரியர், ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி.

1. 0. முன்னுரை

இயல், இசை, நாடகம் என்ற மூன்று கலைப்பகுதிகள் கொண்டு பொலிவுடன் திகழ்வது முத்தமிழ் இம்மூன்று தமிழும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. இவையின் துணைகொண்டு நாடகப் போக்குடன் இனிமையாக இயலுவது இயற்றமிழ். இயலின் பொருட்சுவையின் சொற்சுவையும் கொண்டு இயங்குவது இசைத்தமிழ் இசைத்தமிழின் இனிமையையும் இயற்றமிழின் எழிலையும் கொண்டு பொலிவது நாடகத் தமிழ். இந்த நாடகத் தமிழின் நலமெல்லாம் கொண்டு விளங்குவன பள்ளு நாடகங்கள்.

1. 1.

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் கலைத் துடிப்பின் வெளிப்பாடே பள்ளு நாடக அமைப்பு எனலாம். இவை இலக்கியங்களாகத் தமிழுலகில் அறிமுகமான அளவுக்கு நாடகங்களாக நடிப்புக்கலை உலகிற்கு அறிமுகமாகவில்லை எனினும் இசை தழுவிய கூத்துக்களாக அமைந்துள்ள இவ்விலக்கியங்கள், தமிழகத்தில் ஒரு காலத்தே மக்கள் மன்றத்தில் சிறந்த கலைச்செல்வங்களாகப் பாராட்டப் பட்டு வந்தன என்பது தெளிவு.

1. 2. பள்ளு வகை

'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பது நெல்லை மாவட்டத்து மக்களிடை வழங்கி வரும் பழமொழி. மன்னர்களின் சாதிப் பிரிவுகளைக் கணக்கிட முடியாது என்பதே இப்பழமொழியின் பொருள்: எனினும் பள்ளு இலக்கிய வகைகளை எண்ண முடியாது என்று

பொருள்படுகிறது என்று கொண்டாலும் தவறில்லை. ' முக்கூடற் பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமயிலைப் பள்ளு, சிவசயிலப்பள்ளு, வைசியப்பள்ளு, வடகரைப்பள்ளு, உரிமை நகர்ப்பள்ளு, சீகாழிப்பள்ளு, தில்லைப்பள்ளு, கண்ணுடையம்மைபள்ளு, கதிரைமலைப்பள்ளு, பருளைவிநாயகர் பள்ளு, கனகராயன்பள்ளு சேற்றூர்ப்பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு மாங்தைப்பள்ளு, கூடற் பள்ளு. தஞ்சைப்பள்ளு தென்காசைப்பள்ளு, கொடுமளூர்ப்பள்ளு, இராசைப்பள்ளு, புதுவைப்பள்ளு, முக்கூட்டுப்பள்ளு, மன்னார் மோகனப்பள்ளு. சண்பகராமன்பள்ளு. திருச்செந்தில்பள்ளு, வையாபுரிப்பள்ளு, என ஏறத்தாழ முப்பது நூல்கள் தோன்றியுள்ளன. அனைத்து நூல்களும் முக்கூடற்பள்ளு என்ற சிறந்த நூலை அடியொற்றியே எழுந்துள்ளன. எனினும் இவையனைத்தும் முக்கூடற்பள்ளு போன்று அத்துணை இலக்கியச் சிறப்புடையனவாக இல்லாமையால், போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரவில்லை எனலாம்.

2. மக்கள் இலக்கியம் :

பள்ளு நூல்களைப் பாமர மக்களின் இலக்கியங்கள் எனலாம் காடு திருத்திக் கழனியாக்கி, உழுது பயிரிட்டு உலகிற்கு உணவளிக்கும் உழவர்களின் வாழ்க்கை வரலாறுகள் இவை. இவை பள்ளர்களின் வாழ்வியலின் படப்பிடிப்புக்கள். அரசியல் குழப்பங்களால் அமைதியற்ற அரசியல் சூழலில், நாட்டு மக்களிடையே கலையுணர்ச்சி தேங்கிக் கிடந்த போது, ஆங்காங்கே மின்மினிகள் போன்று ஒளி வீசியவை தாம் பள்ளு போன்ற நாடக இலக்கியங்கள் இவற்றிலே இசையின் எழில் உண்டு. நாடகச் சுவை உண்டு. இலக்கியச் சுவையும் உண்டு. இவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவருமே உழு தொழில் செய்து வந்த உழைப்பாளிகள்.

2.1. பள்ளர் :

வாய்க்கால் வரப்புக்களையும், வயல் வெளிகளையும் தம் வாழ்க்கைக் களங்களாகக் கொண்டு, உழவுத்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளாளப் பெருமக்களே பள்ளர் எனப்பட்டனர். இவர்கள் பள்ளமான நிலப்பரப்பில் வாழ்ந்து வந்தமையால்

மேட்டுக்குடியினரால் பள்ளர் என அழைக்கப்பட்டனர் என லாம். நாளடைவில் உழுதுண்ணும் வேளாளர், உழுதுண்பிக்கும் வேளாளர் என இவர்கள் இரு பிரிவினராகி, உழுதுண்ணும் வேளாளர் பொருளாதார நிலையிலும் பள்ளத்தில், சமுதாயத்தின் அடித்தளத்தில் தங்கலாயினர். தங்கள் நிலங்களின் எல்லைகளைக் கூட அறியாதவராய்ப் பெரும் நிலக்கிழார்கள் ஒருபுறம் இருக்க அவர்களின் நிலங்களில் பண்ணையார்கள் எனப்படும் இடைநிலைத் தரகர்களின் மேற்பார்வையில் பள்ளர்கள் உழுது பயிரிட்டு வந்தனர். உழைப்பையே நம்பி வாழ்ந்த பள்ளர்களையும், வாழ்வின் மேல்தளத்தில் அமர்ந்து கொண்டு அவர்களை விரட்டி வேலை வாங்கி வந்த பண்ணையார்களையும் இணைத்து இவர்கள் வாழ்வின் கேலிச்சித்திரங்களாக எழுந்த இசை நாடக நூல்களே பள்ளு இலக்கியங்கள்.

2.2. இசை வாழ்வு:

பள்ளர்களின் வாழ்க்கை இசையும் கூத்துமாக இயைந்து அமைந்தது. ஆற்று நீரோசை அருவி ஒலியினிலும், கூடிப்பறந்து வரும் புள்ளின் இசையினிலும், இவர்கள் உள்ளம் பறி கொடுத்துத் தம் வாழ்வையே இசைமயமாக்குபவர்கள். ஏற்றப் பாட்டு, கோற்றொடி மாதரார் கைகொட்டிக் களித்துக் களை பிடுங்கி நாற்று நட்டு எழுப்பும் குரவையொலி, கட்டுக்கடங்காக் காளைகளைப் பொன்னேரில் பூட்டி, மண்ணைப் பொன் விளையும் களமாக்கிப் பாடும் ஏர்மங்கலப் பாட்டு, கதிரறுத்துக் களத்து மேட்டினில் குவித்துக் கைகோத்துத் துணங்கைக் கூத்தாடி எழுப்பும் துள்ளல் பாட்டு – ஆகிய பாடல்களும் ஆடல்களும் அவர்கள் வாழ்க்கையின் தனியுடைமைகள். இவர்தம் இனத்தைச் சார்ந்த மகளிர் பாடிய பாடல்கள் 'உழத்திப் பாட்டு' எனப் பட்டுப் பின்னர்ப் பள்ளுப்பாடல்களாக மலர்ந்தன. இப்பாடல் கள் பள்ளர்களின் வாழ்வின் சுவை மிகுந்த நிகழ்ச்சிகளைக் கொச்சகக் கலிப்பா, சிந்து, விருத்தம் போன்ற பாவகைகளில், இசையாகப் பாடுதற்கும் நாடகமாக நடித்தற்கும் ஏற்றவாறு அமைந்துள்ளன. ஐந்திணை மக்களின் வாழ்க்கையை விளக்கும் வரிப் பாடல்களாகிய குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி போன்று, இவற்றுள் பெரும்பாலன போற்றுவா ரற்று மறைந்து போயின. முக்கூடற்பள்ளு, பருளை விநாயகர்

பள்ளு, திருமலைமுருகன் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு போன்ற சில நூல்கள் மட்டுமே இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

3.0. அமைப்பு :

பள்ளு நூல்களில் தலைவன், தலைவியர் பெயர் சுட்டிக்கூறப் பெறுவதில்லை. இந்நூல் எந்தப் பகுதியில் தோன்றப் பெறுகிறதோ அந்தப் பகுதியிலுள்ள வழிபடு கடவுளின் பெயரே, நாடகத் தலைவன் பெயராக அமைகிறது. முக்கூடற் பள்ளுத் தலைவன் வடிவழகக் குடும்பன், திருமலைப் பள்ளுத் தலைவன் திருமலைக் குடும்பன். குருகூர்ப் பள்ளுத் தலைவன் பராங்குசப் பள்ளன் என்ற பெயர்கள் இவ்வுண்மையை விளக்கும். எல்லாப் பள்ளு நூல்களிலுமே பள்ளனுக்கு இரு மனைவியர் இடம் பெறுகின்றனர். பள்ளன், அவன் மனைவியர். பண்ணையார். ஏனைய பள்ளர், பள்ளியர் ஆகியோர் நாடக உறுப்பினர்கள் ஆவர். காப்புச் செய்யுளுடன் இந்நாடகம் தொடங்குகிறது அவ்வவ் ஊரின் தெய்வங்கள், ஆங்காங்குப் புகழ் பெற்ற அடியார்கள் போன்றோருக்கு வாழ்த்துப் பாடல்கள் பாடப் பெறுகின்றன.

3.1.

வாழ்த்துப் பாடல்களுக்குப் பின்னர் மூத்த பள்ளியின் வருகை குறிப்பிடப்படுகிறது. இன்று காணப்படும் நாடகங்களில் இடையிடையே நாடகாசிரியன் நுழைந்து விளக்கம் கூறுவது போல், கவிக்கூற்றாக வரும் பாடல்கள் நாடக உறுப்பினர்களை அறிமுகப்படுத்துகின்றன. இப்பாடல்களை, அரங்கத்தின் ஒரு புறத்து அமர்ந்திருந்து இசைக்குழுவினர் பாட, உறுப்பினர்கள் கூத்து மேடைக்கு வந்து ஆடிச் சென்றிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலை நோக்குவோம்.

"நெற்றியிலிடும் மஞ்சனைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்

நெகிழ்ந்த கருங்கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்

பற்றிய கரும்பொற் காப்பும் கையில்
வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய

பாக்கும் ஒருசுருளுக் கொருகால்
நீக்கும் இதழும்

வெற்றிவிழிக் கெதிர் கொண்டிரு கோ
டுற்ற கருப்பின்னு மெதிர்ந்தால்

விரிந்திடு மென்றெண்ணிச் சற்றே
சரிந்த தனமும்

சிற்றிடையும் செம்பொன்னிடைக் கிடை
பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்

திருமுக கூடல் வாய்த்த பள்ளி
தோன்றினளே ''

இப்பாடலில் மூத்த பள்ளியின் தோற்றம் படப்பிடிப்பாக வெளிப்படுதலைக் காண்கின்றோம். இதுபோன்றே ஒவ்வொரு உறுப்பினரும் அரங்கத்திற்குவரும் காட்சியும் விளக்கப்படுகிறது.

3.2.

மூத்த பள்ளிக்குப் பின்னர் இளைய பள்ளி வந்து தோன்றுகிறாள். அவளும் அழகில் மூத்தவளுக்கிளைத்தவள் அல்லள். அவளுடைய சிறப்பினால் ''சோதி முக மன்னருக்கே தோன்ற வயலுற்று நட்டபோதில் ஒரு பூவில் ஐந்து பூவும் பயிராகுமாம்'' இவர்கள் இவ்வாறு வர ஆட்டுக்கடாய்க் கொம்பு மீசையும், கத்தரிகையிட்ட கன்னப் பரிசும், இடுப்பில் இறுக்கிக் கட்டப் பட்ட கச்சையும் கொண்டு, தடி சுற்றி, ஏப்பமிட்டவாறே மது வெறி கொண்ட வடிவழகக்குடும்பன் சிரிப்புடன்வந்து தோன்றுகின்றான். வந்து தன் குலப்பெருமையைப் பாடுகிறான். பள்ளியர் இருவரும் அவ்வாறே தத்தம் குலப்பெருமையைப் பாடி ஆடுகின்றனர். தன் குலப்பெருமையைப் பாடும்போதே மாற்றாளின் நிலையைப் பழிப்பது போல் ஒவ்வொரு பள்ளியும் பாடு

கிருள். "பத்திலே பதினொன்ருக வைத்தானில்லைக் குடும்பன்; பண்டே சரடு கட்டிக்கொண்டான் என்னை" என்கிருள் மூத்த பள்ளி. இளைய பள்ளி "கஞ்சிக்கும் தன்னிலே நான் கெஞ்சிப் புகுந்தவளல்ல, கண்டாசைப்பட்டே கொள்ளும் பெண்டான வள். மஞ்சிற் கறுப்பழகர் தஞ்சைப் பள்ளனுக்கேற்ற மருதூர் இளைய பள்ளி நானே யாண்டே" என்று பெருமிதத்துடன் பாடு கிருள். இதுபோன்றே அவரவர் நாட்டு நகரப் பெருமைகளைப் போட்டியிட்டுப் பாடுகின்றனர். மழை பெய்வதற்கு மேகத்தைக் கூவுமாறு குயிலுக்கு ஆணையிடுகின்றனர். மழைக்குறி தோன்று கிறது. நாடகாசிரியனது கவிதைவெள்ளத்தில் ஆற்றுவெள்ளம் கங்கு கரையின்றிப் பொங்கு புனலாய்ப் பாய்கின்றது.

3.3.

பின்னர்ப் பண்ணைக்காரன் வந்து தோன்றுகிருன். மூத்த பள்ளி அவனிடம் பள்ளனைப் பற்றிய குறைகளைக் கூறி முறை யிடுகிருள். "தூக்குணிப் பள்ளன் ஏய்க்கிற ஆட்டத்தைக் கேளும் நயினரே, காக்கும் காலனைப் பார்ப்பதில்லை. மூக்கிலே கோபம், என் புத்தியும் கேட்பதில்லை. உழுவதற்கென்று கை யில் கோலும் எடுப்பதில்லை. நான் சோறிட்டாலும் ஏறிட்டுப் பார்ப்பதில்லை. இளைய பள்ளி மருதூராளை விருதுக்கே வைத் திருக்கிருன், பட்டை நெல்லெல்லாம் பேய்த் தண்ணீருக்கு இறைத்து விட்டான் ஆண்டே" என்று குறை கூறுகிருள். உடனே பண்ணைக்காரன் இளைய பள்ளி வீட்டுக்குச் சென்று பள்ளனைத் தேடுகிருன். குடிலுக்குள் பள்ளனை ஒளித்து வைத்து விட்டுப் பொருத்தமாக மறைத்துப்பேசுகிருள். உண்மையறிந்த பண்ணைக்காரன் சிற, வடிவழகக் குடும்பன் வெளிப்படுகிருன். தன் உழவுத் திறமை, உழவு மாடு. ஏர்க்கால், கொழு ஆகியவற் றின் சிறப்பினைப் பாடுகிருன். வயலுக்குக் கிடை வைக்கக் கோதிலானந்தச் சாதி இடையனை அழைத்து வரச் சொல்லு கிருன்.

3.4.

மீண்டும் தொழிலில் கருத்தின்றி இளைய பள்ளியின் இல் லத்திலேயே தங்கிய பள்ளனைப் பற்றி மூத்த பள்ளி பண்ணைக்

காரனிடம் முறையிடுகிறாள். ஆத்திரமடைந்த பண்ணைக்காரன் பள்ளனை குட்டையிலிடுகிறான். பின்னர் அவளே தன் பொறுமை காய்ச்சல் விலகியதும், பண்ணையாரிடம் முறையிட்டு விடுதலை பெற்றுத் தருகிறாள். விடுதலை பெற்ற பள்ளன் மாட்டின் வகைகள், ஏர்க்காலின் வகைகள் இவற்றைக் கூறி ஆடலும் பாடலுமாகத் தன் தொழிலைச் செய்கிறான். எதிர்பாராத வகையில் அவனை மாடு ஒன்று முட்டித் தள்ள பள்ளியர் இருவரும் அழுது புலம்புகின்றனர். புலம்பலின் போதும் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ள மறந்துவிடவில்லை. தாக்குதல்களைக் கேட்டுச் சிரித்தவாறே பள்ளன் எழுந்திருக்கிறான்.

3·5

அறுவடை முடிகிறது. நெல்லனைத்தையும் இளைய பள்ளிக்கே கொடுத்துவிட்டான் என்று மூத்தபள்ளி மீண்டும் முறையிடுகிறாள். பண்ணைக்காரனிடம் முறையிட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இளையபள்ளி அங்குவர இருவரும் ஒருவரையொருவர் சொல்லால் தாக்குகின்றனர். இறுதியில் அமைதியடைந்து முக்கூடலழகர் பாதம் பணிந்து வாழ்வதாகக் கதைத் தளம் அமைந்துள்ளது.

4·0 சொல் மோதல்:

பள்ளரின் அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளையே எளிய இனிய தமிழில் எடுத்தியம்புகிறது இந்நூல். உரையாடல்கள் விறுவிறுப்பாக அமைந்துள்ளன. மூத்த பள்ளி, இளைய பள்ளி இருவரும் ஒருவரையொருவர் தாக்கிப் பேசுவது சுவையான காட்சியாகும். மாடு முட்டித்தள்ளிப் பள்ளன் வீழ்ந்து கிடக்கும் போதுகூட "மத யானை முதல் பிடிக்கவல்லாய், இந்த மாட்டுக்கு மாட்டாமல் போனதென்ன சொல்லாய்! உன் தலைவிதியோ அல்லது மருதூர்ச் சக்களத்தியின் புலை மருந்தின் வெறியோ!" என்று புலம்புகிறாள் மூத்த பள்ளி. இதைக் கேட்டும் இளைய பள்ளி வாளாவிருக்க இயலுமா? "வடுப்படா மேனி வடுப்பட்டதோ! உன் சமர்த்தும் போய்விட்டதோ! மூக்கூடற் சதுரி பார்த்துச் சிரிக்கவோ கிடந்தாய்!" என்று புலம்புகிறாள் இளைய பள்ளி. இதுபோன்றே இருவரும் சந்திக்கும் போதெல்லாம்

ஒருவரையொருவர் சொற்களால் மோதிக்கொள்வது சுவையான காட்சிகளாய் அமைந்துள்ளன.

4·1 பண்ணைக்காரன்

கருத்தளவில் மட்டும் ஒரு நூலின் சிறப்பு அமைந்துவிடுவதில்லை. அந்நூலை நடத்திச் செல்லும் முறையழகினாலேயே அது சிறப்படைகிறது. பள்ளு நாடகங்கள் இம்முறையில் வெற்றி பெற்றவை என்றே கொள்ளலாம். இந்நாடகங்களில் தோன்றும் பண்ணைக்காரன், நகைச் சுவைப் பாத்திரமாக அமைவதோடு நாட்டின் நிலையை விளக்குபவனாகவும் காட்சியளிக்கிறான். மாறு கண், பருத்திப்பைக் கூறு வயிறு, கீரை மத்துப்போல் தலை, சுரை வித்துப்போல் பல், நெரித்த மாங்கொட்டை போல் ஈ அரித்த வாய், தூங்கல் சண்ணைக் கடா போன்ற நடை, மொண்ணை முகம், வேறாக அறுத்து ஒட்டவைத்தது போன்ற காது— இவ்வாறு முக்கூடற் பள்ளுப் பண்ணைக்காரனின் அழகு கூறப்படுகிறது. 'முட்டி தட்டுங்கால், பொட்டைக் கண், தொண்டு தலை, குண்டு சட்டி வாய் இவற்றுடன் "ஒட்டகம் இவரால் கட்டழகு பெற்றதென்றால் ஒன்றையொன்றைச் சொல்வதென்ன" என்கிறது திருமலைப்பள்ளு. பெரும்பாலும் உழைத்துப் பிழைக்காதவர்களாகவும் பள்ளர்களிடம் கைக்கூலி கேட்பவர்களாகவும் இவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் "சாத்தி மகள் காத்தி தன்னைப் பேத்தி என்பாராம் காத்திராத பள்ளனைப் பரமார்த்தி என்பாராம்" என்ற தொடர் பண்ணைக்காரன் பள்ளியரிடம் பழகும் முறையினைவிளக்கும். 'பரமார்த்தி' என்று குறிப்பிடும் பண்ணைக்காரன் அந்தண குலத்தைச் சார்ந்தவனாக இருந்திருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு. மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் பேசும்போது, 'முட்டிக் கால் பண்ணையாண்டே, விக்கல் வாய்ப் பண்ணையாண்டே, ஆந்தை மூக்கு மூஞ்சிப் பண்ணையாண்டே, சால் வயிற்றுப் பண்ணையாண்டே" என்று குறிப்பிடுவதனைக் கொண்டு, அவளிடம் பள்ளி கொண்டிருந்த செல்வாக்கினையும் உணரலாம்.

"பார்த்தால் பசுப் போல் இருக்கிறீர் கைக்கூலிப் பாவையே
பொன் பணங்கள் குடிப்பள்ளச் சனங்கள் கைஆடுமோ
—கேட்டபோதுமக்கே
கடன் கொண்டு கப்பங்கட்டக் கூடுமோ"

என்ற திருமலைக் குடும்பன் கூற்றினின்றும் பண்ணைக்காரன் கைக்கூலி பெற்றுப் பிழைத்து வந்த அவல நிலையை அறியலாம்

5·0 மீன் வகைகள் :

இந்நூலில் நாம் காணும் மீன் வகைகள், வித்து வகைகள் மாட்டுப் பெயர்கள், உழவு வகைகள் நம்மை வியப்பில் ஆழ்த்து வன. துதிக்கை, மூக்கன், பண்ணை, சாளை, எண்ணெய், பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி, பண்ணுங்கு, பழம்பாசி, மகரம்,. சள்ளை. மத்தி. உல்லம், பொத்தி, மடந்தை, கடந்தை, செம் பொன்னொதுக்கி, மலங்கு, பஞ்சலைக் கெண்டை, கருங்கண்ணி முதலியவை கடல் மீன்கள். பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால் ஒரான், அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால் ஆகிய குளத்து மீன் கள் குறிப்பிடப்பெறுகின்றன.

5·1 நெல் வகை

மணல்வாரி, பூம்பாளை, திருமங்கையாழ்வான். பெருவெள் ளைச்சம்பா, மறுவிலிச் சம்பா, நீலச் சம்பா, வில்லூன்றிச்சம்பா. இராசவாணன், சித்திரக்காலி, வாலான், சிறைமீட்டான், செஞ் சம்பா, கருஞ்சூரை, சீரகச் சம்பா, கத்தூரி வாணன், காடைக் கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, பாற் கடுக்கன், வெள்ளை புத்தன், கறுங் குறுவை, புனுகுச் சம்பா, சொரி குறும்பை, புத்தன்வாரி, குற்றாலன், கற்பூரப் பாளை, மலைமுண் டன், மிளகுச் சம்பா, திருவரங்கன், குறுவைக் கிள்ளை, முத்து வெள்ளை, அரிக்கிராவி, பனைமுகத்தன்— இவை நெல்லின் வகை கள். இப் பெயர்களை உற்று நோக்கினால் நெல்லின் சுவை, நிறம் அமைப்பு இவற்றின் வேறுபாடுணர்ந்து ஒவ்வொரு வகைக்கும் தனித்தனிப் பெயரிட்டு அழைத்த தமிழரின் கலைத்திறம் உணரப் படும்

5·2 மாடு வகை :

இதுபோன்றே மாடுகளையும் அவற்றின் உடலமைப்பு நிறம், செயல் ஆகியவற்றையொட்டிப் பெயரிட்டு அழைத்து வந் தனர் எனத்தெரிகிறது. 'கூழைவாலன், கூடுகொம்பன், குத்துக்

கொம்பன், மயிலை, கரும்போரான், கட்டி வெள்ளை, கொட்டைப் பாக்கன், செம்மறையன், வெண் தலையன், குற்றாலன், வெள்ளிக் கண்ணன், மாலான், மேழைக் காளை, கருமறையன், சூடுதின்னி வெள்ளைக்காலன், மட்டைக் கொம்பன், திருகு கொம்பன், வெடி வாலன், வெறியன், ஆனைச்சொறியன், ஆயிரமல்லியன், அழியன், நரைத்தலை, மடப்புல்லை, சுழற்சிக் கண்ணன், படைப்புப்பிடுங்கி, பசுக் காத்தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத் தலை பூ நிறத்தான்— இவை மாடுகளின் பெயர்கள். மேழி, நுகம், கொழு, ஏர்க்கால், படைவாள், உழக்கோல் ஆகியவை அவர்கள் கையாண்ட உழவுக் கருவிகள்.

5.3 வயல் பெயர்:

மாடுகளைப் பெயரிட்டு அழைத்தது போலவே உழவர்கள் தாங்கள் உழுது பயிரிட்டுவந்த நிலங்களுக்கும் பெயரிட்டுவழங்கி வந்தனர். சிவலப்பேரி ஏரிக்கண்ணூற்று வயல், கதலி வாழை வயல், முதலியார் திருத்துவயல், சன்னைவெட்டியான் வாய்க்காற் போக்கு வயல், கோரை படரும் குண்டு வயல், ஓடையோரத்து வயல், நயினார்மேடு, கரிசல் வட்டம், சாத்தன் திருத்தி, ஆண்டிக் காணி என்பன அவ்வாறு குறிப்பிடப்பட்ட சில பெயர்கள்.

5.4 பள்ளர் பெயர்:

குருந்தி, அருதி, மருதி, செல்லி, இருவி, எல்லி, கலைச்சி, சின்னி, தையலி, பொய்யிலி போன்றவை பள்ளியர் பெயர்கள். தெற்றுப்பல்லி, மந்திமுகத்து மாடி, கருநாக்கி என்று உடலமைப்பை யொட்டி அழைக்கும் வழக்கமும் காணப்படுகிறது. மொட்டை, இருளன், கட்டை, வெள்ளைக்கண்ணன், நெட்டைச் சூரியன் என்பன இவ்வாறு பள்ளர்களுக்கு அமைந்த பெயர்கள்.

6.0. வழக்குச் சொற்கள்:

இந்நாடகங்கள் பள்ளர்களின் வாழ்வியல் விளக்கங்களாக அமைவதால், அவர்களது பேச்சு மொழியும் ஆங்காங்கே இடம் பெறக் காணலாம். ‘ தூக்குணிப் பள்ளன், தொட்டியர் காளை, பேய்த்தண்ணீர், வக்கணை, சங்காத்தம், குண்டுணிக்காரி, மூத லிக்கிருய், சொக்காரி, கச்சற்காய், காசழிதல், தலை நோவுது,

நின்று கிடவாதே, ஒன்றுபோலாச்சு, கருக்கலில் வருவான், மறு கால் உடைக்குது போன்ற பேச்சுத் தமிழ் வழக்குகளையும், வட்டார வழக்குகளையும் இந்நூல்களில் நிறையக் காணலாம்.

6.1. பழமொழிகள்:

இவை போன்றே, நாட்டுப்புறங்களில் உலவி வரும் பழமொழிகளும் இந்நூல்களில் இடம் பெற்றுள்ளன. "கெஞ்சிக் கொண்டு மயிலை ஒரு தூவல் கேட்டால் கொடுக்குமோ?" "வாச்சிக் கல்லது மரக்கணு தீராது" "ஈ மிதித்து முடமாமோ". "சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் என்ன பழுது வரும்?" "காகம் முழுகினுல் கொக்காகுமோ?" "முட்டி விட்டுக் குனிகிற புத்தி, விட்டுக்காட்டினுல் கட்டுக் குலையும் பெண் புத்தி பின் புத்தி" "வடு வந்தால் மறைக்கப்போமோ?" "தீட்டிய மரத்தில் கூர்மை பார்க்கவா?" "பதர் குத்தினுல் அரிசி வருமா?" போன்ற பழமொழிகள் இடையிடையே இடம் பெற்றுள்ளன.

7.0. பழக்க வழக்கங்கள்.

பள்ளு நூல்களைக் கற்போர், இயற்கையோடியைந்து எளிய வாழ்வு வாழும் உழவர் உலகில் நுழைந்து, நாட்டுப்புற உலகின் எழிலைக் கண்டும் கேட்டும் மகிழமுடிகிறது. 'பள்ளர்கள் மழை வேண்டித் தெய்வ வழிபாடு செய்தல், பொங்கலிட்டுத் தேங்காயும் கரும்பும் படைத்தல், குங்குமமும் சந்தனமும் ஐயனார்க்குச் சாத்துதல், கரையடிச் சாத்தாவிற்கு ஏழு செங்கிடாய்களை ஒரே வெட்டாக வெட்டுதல், செஞ்சேவலைப் பலியிடுதல், வடக்கு வாசல் செல்விக்குச் சாராயமும் கள்ளும் படைத்தல் போன்ற வழக்கங்களை இந்நூல்களினின்றும் நாம் அறிகிறோம். மேற்கிலும் கிழக்கிலும் மின்னல் தோன்றுதல், கொப்புகளைச் சுழற்றிக் காற்று அடித்தல், தவளை கூப்பிடுதல், சேற்றினுல் வளையின் வாயை மூடுதல், வெள்ளைப்பூக்கள் வெளிப்படுதல், பருந்து வட்டமிடுதல் ஆகிய இயற்கை நிகழ்ச்சிகள் மழையின் தோற்றத்திற்கு அறிகுறிகளாகக் கொள்ளப்படுகின்றன. இந்நூல்களில் காணப்படும் உழவர்கள் பெரும்பாலும் இரு மனைவியரைக்கொண்டவர் எனினும் பரத்தையர் உறவைவெறுப்பவர். கணவனும் மனைவியும் ஒரு கலத்தில் உண்வுண்ணும் அன்பின

ராகக் காட்சியளிக்கின்றனர். கள்ளும் ஊனும் கலந்த உணவை யுண்டு ஏச்சும் பேச்சுமாகக் காலங் கழிக்கின்றனர். அவர்கள் ஏசலிலும் பூசலிலும் தெய்வங்களும் படாதபாடு படுகின்றன. புராணக்கதைகளை அடிப்படையாகக்கொண்ட அவர்களது சமய நம்பிக்கைகளும் இந்நூல்களில் வெளியாகின்றன. வைணவ சமயத்தைச் சார்ந்த முக்கூடற்பள்ளியும், சைவ சமயத்தைச் சேர்ந்த மருதூர்ப் பள்ளியும் உரையாடும் பகுதிகள் இதற்குச் சான்று.

8.0. சமுதாயம் :

நாட்டுப்புற உலகில் ஏற்றம் காட்டும் எழுத்தோவியங் களாக விளங்கும் பள்ளு நாடகங்கள் இடைக்காலச் சமுதாயத் தின் வரலாற்று விளக்கங்களாகவும் அமையக் காண்கிறோம். நில உடைமையில்லாத உழவர்கள் நிலை; உழு தொழில் செய்வோ ரின் கொத்தடிமை, நிலவுடைமையாளர்கள் உழவர்களைத் தொழு விலடித்துச் செய்து வந்த அடக்குமுறை, உடைமையாளர் களுக்கும் உழைப்பாளிகளுக்குமிடையே; வெறும் மிரட்டலாலும் புரட்டாலும் பிழைத்து வந்த பண்ணைக்காரர்கள் என்றவொரு இனம் தோன்றிய நிலை, இதனால் உழைப்போருக்கு ஊக்கம் குன் றிய நிலை, சமுதாயத்தில் மிஞ்சி நின்ற சமயப் பிணக்குகள் இவை யனைத்தையும் இந்நூல்களில் பரக்கக் காணலாம்.

9.0 முடிவுரை :

நாடகம் என்பது நாட்டின் அகத்தேகாணும் நிகழ்ச்சிகளை வாழ்வியலின் விளக்கங்களை, முத்தமிழும் விரவ, மெய்ப்பாடுகள் தோன்ற வெளிப்படுத்துகின்ற கலையென்று கொண்டால் பள்ளு இலக்கியங்கள், சிறந்த நாடக நூல்களாகக் காட்சியளிப்பதில் ஐயமில்லை பதினேழு. பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமி ழகத்தே உலவி வந்த நாடக வடிவங்கள் இவை. சமுதாய நாட கங்களாக இவை தோன்றி, அன்றையச் சமுதாயச் சிக்கல்களை நகைச்சுவையுடன் எள்ளிநகையாடி வந்திருக்கின்றன. ஆடலும் பாடலுமாக மக்களின் கலையார்வத்திற்கு விருந்தாய் அமைந்து வந்துள்ளன. "ஆங்கில முறையாகத் தமிழ்ப் பாடத்தைக் கற்

பிக்கத் தொடங்கியதிலிருந்து தமிழ்க் குறவஞ்சியும் ஓடி ஒளிந்து கொண்டாள்; பள்ளு என்ற பாவையும் பதைத்துப் பதுங்கிக் கொண்டாள். எனவே ஏடுகளெல்லாம் மறையத்தொடங்கின'' என்று பேராசிரியர் திரு. சேது ரகுநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோலத் தமிழ்ச் சமுதாயம் இவற்றை ஒதுக்கினுலும் இவை வாழ்வோடு ஒட்டிய கலை வடிவங்களாதலால் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நூல் மதிப்புரை :

சுடர் மணி மாலை (மூன்ரும் பதிப்பு)

தொகுப்பாசிரியர்: வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள்
6, தெற்கு கெங்கையம்மன் கோவில் தெரு, சூளைமேடு,
சென்னை 24.

தெய்வபக்தியும், தேசபக்தியும் பிஞ்சுநெஞ்சிலே கொண்ட தனது அன்பு மகள் 'காந்தி'யின் நினைவாக வெளியிடப்பட்டது சுடர் மணி மாலை.

ஆண்டுதோறும் வெளியிட்டு இலவசமாகவே அளித்து வருகிருர் நற்பண்புகள் நிறைந்த கிருஷ்ணன் அவர்கள்.

"இளந் தலைமுறையினர் உள்ளங்களில் தெய்வப் பற்றை ஊட்டுவதற்குரிய மிகச்சிறந்த நூல் தெய்விகப் படைப்பு'' என அறிஞர் பெருமக்கள் இதனைப் பாராட்டியுள்ளனர்.

தொடர்ந்து அவரது பொது நலத்தொண்டு வெற்றிபெற எல்லாம் வல்ல இறையருள் புரிவாராக.

நூல் வேண்டுவோர் 30 காசுகள் அஞ்சல் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

"குடிக் குறள்"

ஆசிரியர்: எழில்மதி,
50, திருவள்ளுவர் தெரு,
ஆத்தூர் – சேலம் மாவட்டம்.

விலை உரூபா 2-00

நீண்ட நெடுங்காலமாக 'குறள் நூல்' வெளிவராத குறையை நிறைவு செய்ய " குடிக்குறள் " என்ற இந்நூலை எழுதியதாகக் கூறுகிறுர் ஆசிரியர். அதுவும் " பத்துப் பதினைந்து ஆண்டுகளாகப் பார்த்துப் பார்த்து வெந்து புழுங்கி வேதனைப்பட்டு " இக்குறளைப் படைத்துள்ளாராம்! அவருடைய வேதனைக்கு அமைதி காண " வள்ளுவர் குறள் " வழியமைத்துக் கொடுத்தது போலும்!

" குடிக் குறளில் " சொற்களை மனம் போனபடி ஆசிரியர் கையாண்டுள்ளார். மதுவினுல் உண்டாகும் அவல நிலைகள் அனைத்தையும் பலவிதமாகச் சொல்லிப் புரிய வைத்துள்ளார்!

ஆனுல் 1971ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 30ம் நாளில் தான் மதுவிலக்கு நிறுத்தி வைக்கப் பெற்றது.

" இதைப் படித்தால் எந்த நல்லவரும் கெட்டவராகி விட மாட்டார், எந்தக் கெட்டவரும் நல்லவராகிவிட மாட்டார் " என்ற ஆசிரியர் குறிப்பு மிகப் பொருத்தமானது!

அப்படியாயின் இந்நூல்.... ?
படைப்பின் நோக்கம் .... ?

குறுக்குத்துறை குமரன் பிள்ளைத் தமிழ்

(திருப்பள்ளி யெழுச்சியுடன்)

ஆசிரியர் **வித்துவான் தி. சு. ஆறுமுகம்,**
4, பகத் சிங் தெரு,
திருநெல்வேலி - 6.

நூல் விலை 75 காசுகள்.

திருநெல்வேலி நகரை அணி செய்து கொண்டிருக்கும் தாமிரபரணியின் மருங்கில் எழுந்தருளி இருக்கும் திருமுருகன் மீது தீந்தமிழில் நூறு பாக்கள் அமைந்த நூல்.

பக்திச் சுவை யொழுகும் " குறுக்குத் துறை குறவஞ்சி " என்ற பெயரில் மற்ருெரு நூலையும் வெளியிட்டுள்ளார் இவ்வாசிரியர்.

இக்காலத்தில் தெய்வ வழிபாட்டுக்குரிய நூல்கள் வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும்.

சேதுபதியும் விவேகானந்தரும்

ப. இராமன், எம். ஏ., தமிழ்த் துணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி.

சுவாமி விவேகானந்தர் வட இமயமுதல் தென் குமரிவரை பரிவ்ராஜகராகப் பாரத நாடு முழுவதும் சென்றார். எத்தனையோ மைல்கள் நடப்பதும், வண்டி வாய்ப்புகள் கிடைப்பின் பயன் படுத்திக் கொள்வதும் என்ற நிலையில் தனது ஓயாப்பயணத்தைத் தொடர்ந்தார். தான் உடுத்திய உடைகளேயன்றி வேறு உடைமைகள் இல்லாமலும், கையில் காசு வைத்துக்கொள்ளாமலும் தனது பயணத்தைத் தொடர்ந்தார். தன்னம்பிக்கையும் இறைவனது அருளுமே அவருக்குத் துணைகளாயின. தனது நெடும் பயணத்தில் எத்தனையோ நாட்கள் பசித்து மெலிந்தார். ஒரு நாள் ஏழையின்குடிலில் புற்கையுணவும் மறுநாள் உயர்ந்த செல்வரின் மாளிகையில் அறுசுவை உண்டியும் அவர்க்கு எதிர்பாராமல் கிடைத்தன. இத்தகைய இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டே சுவாமிகள் தென் கோடியில் இராமேசுவரத்தை நோக்கிப் பயணமானார். செல்லும் வழியில் மதுரையில் தங்கி இராமனாதபுரம்மன்னர் சேதுபதியைத் தக்கஅறிமுக மடலுடன் கண்டார். இந்து சமயத்திலும் அறநெறியிலும் மிகுந்த பற்றுடையவரும், கல்வியிற் சிறந்தவரும், ஈரமும் வீரமும் வாய்க்கப் பெற்றவருமான மன்னர் பாசுகர சேதுபதி அவர்கள் சுவாமிகளைக் கண்ட அளவில் உள்ளம் ஈர்க்கப் பெற்றார். பாரதநாட்டின் அரசர்களுக்குள் பண்பால் மேம்பட்ட பாசுகர சேதுபதி சுவாமிகளின் சீடருள் ஒருவரானார். அறிவும் திருவும் அன்பும் பண்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற சேதுபதியிடம் சுவாமிகள் பாமர மக்களின் கல்வி, வேளாண்மைகளில் சீர்திருத்தம் ஆகியவைபற்றிச் சீரிய கருத்துக்களைக் கூறினார். சுவாமிகளின் தோற்றமும் பொலிவும், நிறைமொழியும் அரசரை வியப்பிலாழ்த்தின: அண்மையில் நடைபெறும் சர்வ மத உலக மாநாட்டிற்குப் பாரதத்தின் இந்து மதப் பிரதிநிதியாகச் சிகாகோ செல்லவேண்டும் என்று சுவாமிகளைச் சேதுபதி மிக வேண்டினார். அதற்கான பொருளுதவியுந் தாம் செய்வதாக உறுதியளித்தார். சுவாமிகளும் அவ்வண்ணமே செல்ல இசைந்தார். இருப்பினும் இரா

மேசுவரம் சென்று தமது தென் கோடிப் பயணத்தை முடித்துக் கொண்டு பிறகு சிகாகோ பற்றிய கருத்தை இறுதியாகக் கூறுவதாகச் சொல்லி இராமேசுவரம் புறப்பட்டார். அங்குச் சென்று தரிசனத்தை முடித்துக்கொண்டு கன்யாகுமரி சென்ருர். குமரித் தெய்வத்தை விழ்ந்து வணங்கிப் பின் மலைபோல் அலையெழும் கடலுள்பாய்ந்து நீந்தி இரண்டு பர்லாங் தொலைவிலுள்ள பாறையிற்சென்று தியானத்தில் அமர்ந்தார். பாரத நாட்டின் வறுமையும் பிணியும், அறியாமையும் அடிமைத் தனமும் ஆகிய எண்ணற்ற இடர்கள் அலை அலையாக மலைபோல் எழுந்தன அவர் தம் உள்ளத்தில். நாட்டினைப் பற்றிய இடரினை முற்றும் நீக்குவதே முதற்கடன் என்ற உள்ளொளி தோன்றியது ஆத்மீக வளர்ச்சியையே நாடும் துறவியான சுவாமிகள் நாட்டின் இடர் களையும் தேசியத் துறவியாக மாறினர்.

சென்னைக்குத் திரும்பியவுடன் அவர் அமெரிக்கா செல்லும் பயணத்திற்குப் பல நண்பர் முயன்ருர்கள். பொருள் திரட்டினுர்கள். இதற்குள் கேத்திரி அரசர் அழைப்பிற்கிணங்க இராசத்தான் சென்ருர். அவர் தம் செலவிலேயே சுவாமி அவர்களை அமெரிக்கா அனுப்பினர்.

சுவாமிகள் ஒருபுதிய உலகத்திற்குப் பயணமாகும் உணர்ச்சியோடு சென்ருர். அமெரிக்க நாட்டில் சிகாகோவில் சர்வ மதப் பேரவையில் பேசிப் பெரும் புகழ் அடையும் வரையிலும் சொல்லொணுத் துயருற்ருர். அவர் சொற்பொழிவாற்றி வாகைசூடிய பின்னர் அமெரிக்கா முழுவதும் பல தொடர்ச் சொற்பொழிவுகளும் வகுப்புக்களும் நடந்தவண்ணமிருந்தன. சிறிதும் ஓய்வின்றி எண்ணற்ற மக்களைச் சந்தித்து இந்துமதமெனும் அமிழ்தத்தை வாரி வழங்கினுர். சுவாமிகளுக்குச் சீடர் குழாமும் உருவாகிற்று அவர் புகழும் செய்தித்தாள்களின் வாயிலாக உலகம் முழுவதும் பரவிற்று. இங்கிலையில் அவர் தமது தாய்நாடு திரும்ப எண்ணினுர். திரும்பும்போது இலங்கைவந்து பின் பாரத நாட்டில் அடிவைக்க எண்ணினுர் அவ்வண்ணமே கடற் பயணத்தை மேற்கொண்டு இலங்கைத் தீவை அடைந்தவுடன் அவருக்கு மிகச் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது. இலங்கையின் பல பகுதிகளிலும் சிறந்த வரவேற்புக்களை ஏற்றுக்கொண்டபின் தாய்நாட்டுப்

பயணத்தைத் தொடங்கிப் பாம்பன் வந்து சேர்ந்தார். சுவாமிகளின் வருகையை முன்னரே அறிந்த அரசர் சேதுபதி அவர்கள் அவரை வரவேற்கச் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தார். பாம்பன் துறைமுகத்தைச் சுவாமிகளின் கப்பல் நெருங்கியவுடன் அரசுப் படகில கரைக்கு அழைத்து வரப்பட்டார். சுவாமிகளை இராமேசுவரத்தில் அரசர் வரவேற்பதாக முன்னர் ஏற்பாடு செய்திருந்தனர். அதனால் சுவாமிகள் உடனே இராமேசுவரத்திற்குப் புறப்படலானார். ஆனால் அரசரே அவர் வியக்குமாறு பாம்பனுக்கு ஓடோடி வந்து வரவேற்கக் காத்திருந்தார். அரசரும் அவர் தம் சுற்றமும் சுவாமிகளின் அடிகளில் விழ்ந்து வணங்கினர். எழில் நிறை பந்தர்க் கீழ் வரவேற்புரை வாசித்தளிக்கப் பட்டது. மேலை நாடுகளில் இந்து மதத்தையும் சிறப்பாக வேதாந்தத்தையும் வெள்ளையர் உள்ளங்களில் பதியவைத்து வாகை சூடியவர் சுவாமிகளையன்றி வரலாற்றில் ஒருவருமிலர் என்றும் உலகசகோதரத்துவத்தையே இந்துமதம் போதிக்கின்றதென்ற அருமையை சுவாமிகள்போல் இதுகாறும் இயம்பினார் எவருமிலர் என்றும் உணர்ச்சி பொங்கும் வரவேற்புரையாக அஃதிருந்தது. அதற்குமேல் அரசர் பாசுகர சேதுபதி அவர்கள் தனது வரவேற்பாகக் கூறிய உரைகளின் ஆழமும் திண்மையும் மிகவும் போற்றத் தக்கவை.

இவ் வரவேற்புரைக்குச் சுவாமிகள் மறுமொழி கூறும்போது, "சமயம், தத்துவம், ஆன்மீகச் சான்றோர்கள், துறவு, உயர்ந்த குறிக்கோள், ஆகிய அனைத்திற்கும் நமது தாய்நாடே பிறப்பிடமாகத் தொன்று தொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது. எத்தனையோ மேலைநாடுகளையும், இனங்களையும் நேரில் கண்டேன். ஒவ்வொரு நாட்டின் தேசியக் கொள்கையும் அரசியல், இராணுவம், வாணிகம், இயந்திரம் என்பவற்றை மையமாகக் கொண்டிருக்கின்றது. ஆனால் நமது நாடோ சமயத்தையே மையமாகக் கொண்டிலங்குகின்றது. மேலை நாடுகளனைத்தும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நமது தாய் நாட்டையே எதிர்பார்த்து நிற்கின்றன. அவ்வான்மீகச் செல்வத்தை அளிக்க வல்லவனாய் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்,

மேலை நாட்டில் நல்லவரும் மிகப் பெரியவரும் தமது மரபின் மூலத்தைக் குறிக்கும்பொழுது எங்கோ மலைப் பக்கங்களில் மறைந்திருந்து வழியிற் செல்வோரைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்கூட்டத்தின் தலைவன் ஒருவனது மரபு என்பதில் பெருமை கொள்கின்றனர்! ஆனல் எவ்வளவு பெரியராணுலும் தமது மரபின் மூலத்தை எங்கோ காட்டில் காய், கனி, கிழங்குகள் உண்டு உடலை வருக்தித் தவம் செய்து உயர்ந்த முனிவர் மரபு எனக் கூறுவதில் பெருமை கொள்கிறோம். இன்றைய நிலையில் நாம் எத்துணை சீரழிந்திருந்தாலும் நாம் விடாமல் முயன்றால் மீண்டும் உயர்ந்த நிலையை அடையலாம். ஆகையால் முயல்வது மிகவும் இன்றியமையாக் கடமை என்று தெளிவான உரை வழங்கினார்.

அரசர் பாசுகர சேதுபதி அவர்கட்கு எனது நன்றியை அளவிட்டுரைக்க இயலாது. நான் அமெரிக்கா செல்வதற்குத் தூண்டுகோலாகவும், உறுதுணையாகவும் இருந்தவரும் அவரே. என்னாலும் என் மூலமாகவும் ஏதேனும் நன்மைகள் ஏற்பட்டிருக்குமானல் இந்தியா இந்த நல்ல மனிதருக்கே மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. எனது அருகில் அதே ஆர்வத்துடன் நின்றுகொண்டு மேலும் என்னைத் தொண்டு செய்யத் தூண்டுகின்றார். இவரைப்போன்ற ஓர் அரை டசன் அரசர்கள் ஆர்வத்துடன் முன்வந்து நமது அருமைத் தாய் நாட்டில் பற்றுக்கொண்டு ஆன்மீகத் துறையில் உழைக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்'', என்று கூறி தமது உரையை முடித்தார்.

இதன் பின்னர் சுவாமிகளைத் தமது குதிரைகள் பூட்டிய கோச் வண்டியில் அழைத்துச் சென்றார். தமது அரசு ஊழியர்களுடன் அரசரும் நடந்து வந்தார் சிறிது நேரத்திற்குப் பின் குதிரைகளை அவிழ்க்கும்படி கட்டளையிட்டார். அரசரும் அவர் தம் ஊழியர்களும் கோச் வண்டியை இழுத்துச் சென்றனர். அரசர் தம் பக்தியை என்னென்பது! மக்கள் திரண்டுவரக் கோச் வண்டி அரச மாளிகையை அடைந்தது. அம் மாளிகையில் அரசரின் சிறந்த விருந்தினராக மூன்று நாள் தங்கிப் பின் இராமேசுவரம் சென்று தரிசனம் செய்தார் கோயிலிலுள்ள அணிகலன்கள் அனைத்தும் சுவாமிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டன. சிறந்த தரிசனத்தை முடித்த பின், அரிய சொற்பொழி

வொன்று அங்கு ஆற்றினர். மனம், மொழி, மெய்யால் தூய்மையாக இருத்தலே உயர்ந்த மதம், கடவுள் பக்தி என்றும், அத்தகைய தூயோர் இருக்குமிடம் குற்றமுடையதாயினும் தூய்மையடையும் என்றும், அவ்வாறன்றிக் குற்றமுடையோர் நமது கோயில்களின் நடுவில் வாழ்ந்தாலும் அந்த இடமுழுவதும் குற்றமாகி விடுமென்றும் சுவாமிகள் விளக்கினர். இறைவனிடத்து அன்பு செய்வோர் ஏழை, எளியவர், வறுமையாலும், பிணியாலும் வாடுவோர் துயர் துடைக்க வேண்டும்; அதுவே இறைவனுக்குச் செய்யும் தொண்டென விளக்கினர். சிவனுடைய முகத்தையும், மூக்கையும், கண்களையும் வருணித்துக் கொண்டிருப்பவர்களிடத்தில் அவனுக்கு அன்பில்லை. அவன் பிள்ளைகளாய், வறுமையாலும் நோயாலும் வாடுபவர்களின் துயர் துடைக்க உழைப்பவர்களிடத்தில் அன்பு கொள்கின்றான் என உண்மைத் தொண்டின் தத்துவத்தை விளக்கினர். ''நானே முதலில் உண்பேன், மற்றோரினும் நான் அதிகப்பொருளை ஈட்டுவேன், அனைத்தையும் நானே அடைவேன். எல்லோருக்கும் முன் நானே முத்தியுலகம் புகுவேன்'' என்பவர் தன்னலமிக்கவர். ''எல்லாவற்றையும் அடைவதில் நான் கடைசி. எனது சகோதரர்களைக் காக்கும் தொண்டினால் எனக்கு நரகம் கிடைப்பினும் அதற்கு உடன்படுவேன்'' என்று தொண்டு செய்பவனே தூயவன். எவருக்குத் தன்னலமில்லையோ அவர் ஆன்மீகத்தில் உயர்ந்தவர். சிவன் அருகிலிருப்பவர் அவர் கற்றவராயினும், மூடராயினும் அவர் சிவனருகிலுள்ளார். தன்னலமுடையார் எத்தனை மூர்த்தி, தீர்த்தம், தலம் என்று சென்றாலும் சிவனுக்கு வெகு தொலைவிலிருக்கின்றார்,' என அரிய நல்லுரை பகர்ந்தார். சுவாமிகளின் சொற்பொழிவால் தம்மையிழந்த அரசர் விழிப்புற்றார். இயல்பாக ஈர நெஞ்சமும், இறையன்பும் கொண்டுள்ள அரசருக்குச் சுவாமிகளின் அமுத மொழிகள் உள்ளத்தில் புதியஒளியைப் பாய்ச்சின. "ஈடில் மானிகளாய் ஏழைகளாய் இளைத்தவர் தமைக் கண்டு இளைக்கும்'', சுவாமிகளின் உள்ளத்திற்கு உவகையூட்டும் வண்ணம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் மறுநாளே இராமேசுவரத்தில் வழங்கிச் சுவாமிகளின் நல்லாசியைப் பெற்றார்.

இராமேசுவர தரிசனத்திற்குப் பிறகு அரசர் தம் தலைநகரான இராமநாதபுரத்திற்குச் சுவாமிகளை அழைத்துச் சென்றார்.

பெரிய ஏரிக்கரையிலே அவர்க்குச் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது. மக்கள் வெள்ளமாகத் திரண்டனர். மக்கள் கனவிலும் நினைவிலும் காணாதவாறு இராமநாதபுரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. இராமநாதபுரத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புரையின் தொடக்கமே அரசர் சுவாமிகளிடம் எத்துணை பக்தி வைத்துளார் என்பதை விளக்கும்.

"ஸ்ரீ பரமஹம்ஸ. யதிராஜ, திக்விஜய கோலாகல, சர்வ மத சம்பிரதிபன்ன, பரம யோகீஸ்வர,. ஸ்ரீமத் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ கரகமல சஞ்சயதா. இராஜாதிராஜ சேவித, ஸ்ரீ விவேகானந்த சுவாமிக்கு" இங்ஙனம் பொதுமக்கள் சுவாமிகளின் பெருமையைக் கூறி, அவர் சிகாகோவில் இந்து சமயத்தின் பெருமையை நிலைநாட்டி, மேலைநாடுகளிலும் பரப்பி வாகை சூடி மீண்டதற்கு நன்றி தெரிவித்தனர். சுவாமிகளின் சீடருள் ஒருவரான தங்கள் அரசரிடம் வைத்துள்ள அன்பிற்கும் அதனால் தாய்நாடு திரும்பும் போது முதலாவதாக இராமநாதபுரம் சமத்தானத்தில் அடிவைத்துப் பெருமைப்படுத்தியதற்கும் வருணிக்கச் சொற்களில்லை என அம் மக்கள் நன்றி கூறினர்.

இத்தகு நல்வரவேற்பை அன்பு வெள்ளமாகத் தோன்றி நின்ற இராமநாதபுர மக்கள் வெள்ளத்திடை ஏற்றுக்கொண்ட பின் சுவாமிகள் அரியதோர் உரை நிகழ்த்தினார். நமது சமயத்திற்காக மேலைநாடுகளில் ஏதேனும் தொண்டு தாம் செய்திருந்தால் அது அரசரையே சாரும். அரசியல், சமூகம், சமயம் எது வானாலும், அல்லது குபேரச் செல்வம் பெற்றாலும் நமது மக்களுக்குச் சமயம் ஒன்றே வேண்டியது. அஃதில்லையேல் யாவரும் மடிவர். இந்த உண்மைகளை வலியுறுத்தி மக்களுக்கு ஏதேனும் செய்திருந்தால் இந்தியா இராமநாதபுரம் அரசருக்கு மிக மிகக் கடமைப்பட்டிருக்கின்றது. அவர் தான் அமெரிக்கா செல்லும் எண்ணத்தைக் கூறி அடிக்கடி தூண்டியவர். அப் பயணத்திற்கு அனைத்துவகையிலும் உற்ற துணையாயிருந்தவர். எனது வெற்றியில் மகிழ்ச்சி கொள்ள வேண்டியவர் மேன்மைமிக்க அரசரே யாவர்! என அன்பொழுகப் புகழ்ந்து கூறினார்.

சுவாமிகளுக்கு முழுவதும் பொன்னால் செய்யப்பட்டதும் மிக்கவியப்பைத்தரும் வேலைப்பாடமைந்ததுமான பொற்பேழை

யில் அவ்வரவேற்பிதழ் வைத்து அளிக்கப்பட்டது. அரசர் தம் சங்கர வில்லா மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருந்தார். சுவாமிகளுக்காகச் சிறப்பு அரசவைக் கூட்டமும் நடந்தது. அரசரின் சமயப் பற்றையும் செங்கோன்மைச் சிறப்பையும் உலகியலில் மிகுதியும் பற்றில்லாது அரசுக் கடனாற்றி வரும் மாண்பையும் கண்டு சுவாமிகள் அவரை அரசருக்குள் முனிவரென்றே போற்றினர். மிதிலை மன்னன் சனகனே அரச முனியாக இருந்தவன் எனப் போற்றுவர், அவனைப் போல் இராமநாதபுரம் சமத்தானத்தை ஆண்ட அரசர் பாசுகர சேதுபதியும் கலியுகத்தில் அரச முனிவராகச் சுவாமிகளின் மனத்தில் தோன்றினர் எனில் அவர்தம் அருங்குணத்தை எங்ஙன் விளக்குவது! அதனாற்றான் 'இராசரிசி' எனப் பட்டமளித்துச் சுவாமிகள் மகிழ்ந்தனர்

இராமனாதபுரத்தில் தங்கியிருந்தபின் பரமக்குடி, சிவகங்கை, மானாமதுரை முதலிய இடங்களில் சிறந்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டு சுவாமிகள் மதுரை நகர் வந்து சேர்ந்தார். அங்கும் அரசர் சேதுபதி தன் மாளிகையில் தான் தங்கினார். மதுரை மக்கள் திரண்டு அவரை வரவேற்றுச் சிறந்த வரவேற்புரை வாசித்தளித்தனர். அவ்வுரைக்குப் பதிலிறுத்த சுவாமிகள், "மதுரையில் அரசர் சேதுபதியின் விருந்தினனாக இருக்கின்றேன். அவர் நினைவுதான் என் சிந்தையில் தற்போது விரைந்தோடி வருகின்றது. அரசர் அவர்களே நான் சிகாகோ செல்லவேண்டுமென்ற கருத்தை அடிக்கடி என்னிடம் சொல்லிப் புறப்படுமாறு தூண்டியவர்என்பதையும் அதற்கானஉதவிகளைச் செய்தவர் என்பதையும் உங்களில் பெரும்பான்மையோர் தெரிந்திருப்பீர்கள் என்னை மிகுதியாகப் புகழ்ந்தீர்கள். அப்புகழ்ச்சி அனைத்தும் அரசர்க்கே உரியது. அவர் அரசராக இருப்பதினும் துறவியாக இருப்பதையே நான் விரும்புகின்றேன். அதற்கே அவர் முற்றும் தகுதியானவர்" என்று சுவாமிகள் அரசரின் பண்பைப் புகழ்ந்தார்.

மதுரை மாநகரில் மீனாட்சியையும், சுந்தரேசுவரரையும் தரிசித்தார். அடியார் பல்லோர்க்கும் ஆசிவழங்கினர். சுவாமிகள் கும்பகோணத்திற்கு இரயில் பயணம் தொடங்கினர். அரசர் சேதுபதி அவர்கள் சுவாமிகளை வழியனுப்பிப் பிரியாவிடை பெற்றுச் சென்றார்.

வேதாந்தச் சிங்கமென உலகு புகழ் சுவாமி விவேகானந்தர் அன்பிற்குரியரானவருள் தலையாயவராக விளங்குபவர் அரசர் பாசுகர சேதுபதி அவர்களே. சுவாமிகளின் மீது கொண்ட எல்லையற்ற அன்பால் அவர் இராமேசுவர வருகையை மறவாதிருக்க வேண்டுமென்று கருதி அவ்விடத்தில் நினைவுச் சின்னம் அமைத்தார். அச்சின்னம் இன்று எவ்விடத்தில் இருக்கிறதென்று கூட அறியமுடியாதவாறு மறைந்து போயிற்று.

நிலத்திற் புதையுண்டதோ, காலத்தால் சிதறுண்டு அழிந்ததோ, கயவரால் பெயர்க்கப்பட்டதோ, எதனால் மறைந்தது எனத் தெரியாமல் திகைக்கின்றோம். தென்கோடிப் பகுதியில் கிருத்தவப் பாதிரிகள் அக்காலத்தில் அரசின் துணை கொண்டு தம் மதத்தைப் பரப்பி வந்தனர். இந்து மதத்தினரை மதமாற்ற நமது மதத்தைப் பழித்துக் கூறினர். மேலை நாட்டவருக்கு இந்து மதப் பெருமையை இனிதே விளக்கி அவரெல்லாம் இந்து மதத்தைப் பின்பற்றுமாறு செய்த வேதாந்தச் சிங்கம் விவேகானந்தரின் வருகை நினைவுச் சின்னத்தை இங்குள்ள பாதிரிகள் பொறுப்பரோ? அவர்களுள் எவரேனும் அழித்தனரோ? யாரைக் குறை கூறுவது? நமது சமயப்பற்று, நாட்டுப்பற்று, நல்லோரைப் போற்றும் பற்று ஆகிய பற்றிலாமையைக் குறை கூறுவதே தகும். அரசர் பெருமான் மனமுவந்து அக்கல்லில் எழுதி வைத்துள்ள அமுத மொழிகளையேனும் அறிந்தின்புறுவோம்.

" Satyameva Jayate

The monument erected by Bhaskara Sethupathi, the Raja of Ramnad, marks the sacred spot, where his Holiness Swami Viveka nanda's blessed feet first trod on Indian soil, to-gether with the Swami's English disciples, on His Holiness's return from the western Hemisphere. where glorious and unprecedented success attended His Holiness's philanthrophic labours to spread the religion of the Vedanta.

" January 27, 1897 "

1972-73ல் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த் தேர்வு பற்றிய அறிக்கைக் குறிப்புக்கள்.

தமிழ் அன்பர்களுக்கு வேண்டுகோள்.

அன்புடையீர் வணக்கம்!

வள்ளல் பாண்டித்துரைத்தேவரவர்கள் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யும் நோக்கமுடன் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அன்று ஆட்சி புரிந்த ஆங்கில அரசும், பல்கலைக் கழகங்களும் தமிழைப் புறக் கணித்த காலம். கன்னித்தமிழ் காக்க ''தமிழ்க் கலாசாலை'' ஒன்றைத் தேவரவர்கள் அன்றே அமைத்தார்கள். மாணவர் களுக்கு இனிய தமிழை இலவசமாகக் கற்பித்தார்கள். ''செந்தமிழ்'' என்னும் திங்களிதழ் வாயிலாகவும், நற்றமிழ் நூல் பல வெளியிடுதல் மூலமாகவும் தமிழறிவை உலகெங்கும் பரப்பி னார்கள். திரு. டாக்டர் உ. வே. சாமிநாதையர், நாவலர் திரு. நா. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. அரசஞ்சண்முகனார், திரு. நாவலர் சோமசுந்தரபாரதியார், திரு. மு. ராகவய்யங்கார், திரு. கார்மேகக் கோனார் முதலிய தமிழ் அறிஞர்களை இங்கு அமரச் செய்து சங்க காலத் தமிழாராய்ச்சியை வளர்த்தார்கள். இவ் வாறு அல்லும் பகலும் அயராது உழைத்து அருந்தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரை அவர்களுக்கு மதுரை மாநகரில் சிலை யொன்று எழுப்பிச் சிறப்புச்செய்ய முடிவு செய்துள்ளோம். மேலும் தேவரவர்களுடைய தொண்டு தடையின்றி நடைபெறத் தமிழ் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் திட்டங்கள் பல தீட்டி யுள்ளோம்.

நற்றமிழை நாள்தோறும் பரப்பும் நற்பணியில் ஈடுபட் டுள்ள செந்தமிழ் வல்ல சான்றோர்களே, கல்லூரி முதல்வர்களே, பேராசிரியர்களே, பயிற்சிப்பள்ளி, உயர்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியர்களே, தமிழாசிரியர்களே, நீவிர் அனைவரும் மேற்கண்ட எங்கள் பணிக்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்கு மாறு வேண்டுகிறோம். மிகப் பெரும்பான்மையான மாணவர்,

களைத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ்த் தேர்வுகளில் கலந்து கொள்ளச் செய்து எங்கள் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவ வேண்டுகிருேம்.

தேர்வின் அமைப்பும், பயனும்.

உயர்நிலைப்பள்ளி பயிற்சிப்பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களைத் தமிழ்மொழியில் போதிய புலமை பெறுவதற்கு இத்தேர்வுகள் துணை புரிகின்றன. அரசாங்கத் தேர்வுகளும்; பல்கலைக்கழகத் தேர்வுகளும் எந்த முறையில் நடைபெறுகின் றனவோ அந்த முறையிலேயே இச்சங்கத்தேர்வுகளும் நடை பெறுகின்றன. பல்கலைக் கழகத்தினர், அரசாங்கத்தினர் கேட்கும் முறைகளைப் பின்பற்றியே, வினுத்தாளின் நேரம், வினுக்களின் அமைப்பு முறை முதலியன கொண்டு இச்சங்க வினுத்தாட்கள் அமைக்கப்படுகின்றன. எனவே மாணவர் கட்குத் தேர்வு எழுதுவதில் நல்ல பயிற்சியும், அனுபவமும் ஏற்பட்டு விடுகின்றன.

அரசாங்கத்தேர்வு, பல்கலைக் கழகத்தேர்வு இவற்றிற்கு முன்னதாகவே இச்சங்கத்தேர்வுகள்நடத்தப்பெற்று உரியமதிப் பெண்களும், சான்றிதழ்களும் அனுப்பப்படுகின்றன. ஆதலின், மாணவர்கள் அவற்றைக்கொண்டு மேலும் படித்து நிறைய மதிப்பெண்கள் பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படுகிறது.

தேர்வு முடிவுகள்

இத்தேர்வின் முடிவுகள், அரசாங்கம் அல்லது பல்கலைக் கழகத்தார் நடத்தும் தேர்வுகட்கு முன்னதாகவே மாணவர் கட்கு அறிவிக்கப்படும்.

சான்றிதழ்கள்:

தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கட்குரிய சான்றிதழ்கள் பள்ளி அல்லது கல்லூரி வீடுமுறைக் காலத்திற்கு முன்னதாகவே முதல்வர் / தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படும். மாணவர்கள் தங்களுக்குரிய சான்றிதழ்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சான்றிதழின் சிறப்பு :

இச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்போர், படிப்பை முடித்த பின், அரசாங்க அலுவலுக்கோ அன்றி வேறு வேலைக்கோ செல்லுங்காலத்து அவர்கள் சிறப்புத்தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். மேலும் இச்சங்கத்துச் சான்றிதழ் வைத்திருப்போருக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

பரிசுகள் :

உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரித் தேர்வுகளில் மாநில அளவில் முதல், இரண்டாம், மூன்றும் இடத்தில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிற்கும் பரிசுகள் அளிக்கப்படுவதைத் தாங்கள் அறிவீர்கள்,

பரிசு விபரம்:

முதல் பரிசு	—	ரூ. 100—00
இரண்டாம் பரிசு	—	ரூ. 50—00
மூன்றும் பரிசு	—	ரூ. 25—00

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுக்குத் தனித்தனிப் பரிசுகள் அளிக்கப்படும். ஒவ்வொரு உயர்பள்ளி, பயிற்சிப்பள்ளியிலும் முதல் இடத்தில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு நூல்களாகப் பரிசளிக்கப்படும்.

தேர்வாளர்களுக்கு அன்பளிப்பு :

	தாள் ஒன்றுக்கு
பதினோராம் வகுப்பு	50 காசுகள்
பயிற்சிப்பள்ளி	50 காசுகள்
புகுமுக வகுப்பு	55 காசுகள்
பட்ட வகுப்பு	60 காசுகள்

உயர் பள்ளி, பயிற்சிப்பள்ளித் தேர்வுகள் கால அட்டவணை.

	வகுப்புகள்	நாள்	காலம்	
1	உயர்பள்ளி இறுதி வகுப்பு (Standard XI)	10—2—73	காலை	10—12½
			மாலை	2—4½
2	பயிற்சிப் பள்ளி (Training School)	10—2—73	காலை	10—12

தேர்வுக் கட்டணங்கள்

		ரூ.—பை
1.	பள்ளியிறுதி வகுப்பு :	
	பொதுத் தமிழ் (Academic Course)	2—00
	தொழிற் பிரிவு (Diversified Course)	1—00
2.	பயிற்சிப் பள்ளி	1—25

கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதிநாள் **25-1-73**

கல்லூரித் தேர்வுகள் கால அட்டவணை

சென்னைப் பல்கலைக்கழகக் கல்லூரித் தேர்வுகள்.

வகுப்பு	தேர்வு நாள்	தேர்வு நேரம்	தேர்வுக் கட்டணம்
1. புகுமுக வகுப்பு (PUC Part I)			ரூ.-பை
முதற்றாள் (I Paper)	24-2-73	காலை 10—1	2—50
இரண்டாந்தாள் (II Paper)	„	மாலை 2—5	
2. இளங்கலை-முதலாமாண்டு (B. A., B. Sc, I Year)	„	காலை 10 -1	1 — 50
3 இளங்கலை-2-ம் ஆண்டு (B. A., B, Sc. II Year)	„	காலை 10—1	1 — 50
4. புகுமுக வகுப்பு சிறப்பு (P. U. C. Adv)	26-2-73	காலை 10—1	1 — 25

மதுரைப் பல்கலைக்கழகக் கல்லூரித் தேர்வுகள்.

1. புகுமுக வகுப்பு (P U.C)			
முதற்றாள் (I Paper)	24-2-73	காலை 10—1	2—50
இரண்டாந்தாள் (II Paper)	„	மாலை 2—5	
2. இளங்கலை-2-ம் ஆண்டு (B. A.. B Sc.. II Year)			
இரண்டாந்தாள் (II Paper)	„	காலை 10—1	2—75
மூன்றாந்தாள் (III Paper)	„	மாலை 2—5	
3. புகுமுக சிறப்பு (P U. C. Adv)	26-2-73	காலை 10—1	1 — 25
4. இளங்கலை முதலாண்டு (B. A , B. Sc.. I Year)	„	காலை 10—1	1 — 50

கட்டணம் செலுத்த வேண்டிய இறுதி நாள்: 10-2-73

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆர். செல்லத்தேவர்,
துணைத்தலைவர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625001.

நூல் மதிப்புரை.

கட்டுரைக் களஞ்சியம்

ஆசிரியர்: பா. வளன் அரசு M. A.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை.

நூல் விலை உரூபா 2-00

வளர்ந்து வரும் தமிழகத்தில், தமிழ்அன்னை அரியணையேறி ஆட்சி புரியும் இன்றைய நாளில், இளைஞர்களும் மாணவர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம், நற்கருத்துக்களைத் தூய தமிழ் நடையில் ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். இவ்வுலகில் வளர்ந்து வரும் பல துறை அறிவினை முப்பத்தேழு கட்டுரைகளில் அழகுற விளக்கியுள்ளார்.

ஆராய்ச்சியாளரும் கட்டுரையாளரும் நடுநிலை தவறாது காய்தல் உவத்தல் இன்றி உண்மை நிகழ்ச்சிகளை முறையாகத் தொகுத்து வெளியிட வேண்டும் என்பதைச் சீரிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டமை பாராட்டுக்குரியது. இந்நூலின் இடையிடையே சான்றோர் பலரது கருத்துக்களும் தமிழ் மறையின் குறட்பாக்களும் பொருத்தமான இடங்களில் எடுத்தாளப் பெற்றமைப் போற்றற்குரியது.

கருத்துக் களஞ்சியமாக அமைந்துள்ள இந்நூலைத் தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறலாம்.

தமிழ்க் கிளவி

இரா. கோதண்டராமன், எம். ஏ. (தமிழ்) எம். ஏ, (மொழியியல்)
மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தொகுதி 67 பகுதி 1 தொடர்ச்சி

சில வினையடிகளும், அவற்றின் வினையெச்சங்களும் :

செய்து வாய்பாட்டு வினையெச்சங்களாக அமையும் போது பெறு, உறு, சுடு, நடு, போன்ற வினையடிகள் முறையே ,*பெறுத்து, *உறுத்து, *சுடுத்து, *நடுத்து என நிகழாமல் பெற்று, உற்று, சுட்டு, நட்டு என அமையும் நிலை காணப்படுகின்றது. கற்று, விற்று, கேட்டு, மீட்டு ஆகிய வினையெச்சங்கள் முறையே கல், வில், கேள், மீள் ஆகிய வினையடிகளின் மீது அமைந்தியல்வதைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது பெற்று, உற்று, சுட்டு, நட்டு போன்ற வினையமைப்புக்கள் முறையே *பெல், *உல், *சுள்[1], *நள் ஆகிய வினையடிகளின்மீது நிகழ்வதே புணரியல்நிலையில் பொருத்தமாகத் தோன்றுகிறது. பெற்று, உற்று, சுற்று, நட்டு ஆகிய வினையமைப்புக் களின் இப்போதைய வினையடிகளாகிய பெறு, உறு, சுடு, நடு தொடக்கத்தில் *பென்று, *உன்று *சுண்டு, *நண்டு என அமைந்து பின்னர் மெல்லொலியை இழந்து இறுதியில் பெற்று, உற்று, சுட்டு, நட்டு ஆகிய வினையமைப்புக்களின் வினையடிகளாக அமைந் தனவாகக் கருதலாம். நின்று, வென்று, கொண்டு, விண்டு ஆகிய வினையமைப்புக்கள் முறையே நில், வெல், கொள், விள் ஆகிய வினை களின் அடியாகத் தோன்றியது போலவே *பென்று, *உன்று, *சுண்டு, *நண்டு ஆகிய வினையமைப்புக்களும் முறையே *பெல், *உல், *சுள்[1], *நள் ஆகிய வினைகளின் அடியாக அமைந்தனவா தல் வேண்டும். இதனைப் பின் புலமாகக் கொண்டு பெற்று, உற்று, சுட்டு, நட்டு ஆகிய வினையமைப்புக்களையும், பெறு, உறு, சுடு, நடு ஆகிய 'வினையடிகளையும்' பின்வருமாறு ஆராயலாம்.

---

1 *சுள் என்னும் கிளவி இப்போது வினையடியாக விளங்காமற் போயினும் 'சுள் என வெயில் காய்ந்தது' என்னும் தொடரனில் அது குறிப்புச் சொல்லாக வழங்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

அ. பெற்று < * பெல்த்து < பெல்-து
உற்று < * உல்த்து < * உல்-து
சுட்டு < * சுள்த்து < * சுள்-து
நட்டு < * நள்த்து < * நள்-து

ஆ. பெறு < *பென்று < *பென்து < *பென்ம்து < *பெல்ம்-து *பெல்ம் < *பெல்-உம்
உறு < *உன்று < *உன்து < *உன்ம்து < * உல்ம்-து *உல்ம் < * உல்-உம்
சுடு < *சுண்டு < *சுண்து < *சுண்ம்து < *சுள்ம்-து. சுள்ம்— < *சுள்-உம்
நடு < நண்டு < நண்து < நண்ம்து < நள்ம்து. நள்ம்— < நள்-உம்

பெறு, உறு, சுடு, நடு, ஆகிய வினைகளின் முந்தைய வடிவங்களாகிய பென்று. உன்று, சுண்டு, நண்டு ஆகிய வினையமைப்புக்களும் பெற்று, உற்று. சுட்டு, நட்டு ஆகிய வினையமைப்புக்களும தொடக்கத்தில் முற்றுப் பொருண்மையையும், எச்சப் பொருண்மையையும் உணர்த்தியிருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது மெல்லொலி வீழ்ச்சியால் பென்று, உன்று. சுண்டு, நண்டு ஆகிய வடிவங்கள் முறையே பெறு. உறு, சுடு, நடு என அமைந்த நிலையில் முற்றுப் பொருண்மையையும் எச்சப் பொருண்மையையும் இழந்து ஏவற் பொருண்மையை உணர்த்தத் தொடங்கினவாகக்கருதலாம். இந்நிலையில் அமைப்பில் முற்றிலும் வேறுபட்ட வினைவடிவங்களாகிய பெற்று, உற்று. சுட்டு, நட்டு ஆகியவை தமக்கே உரியனவாகிய பெல், உல், சுள், நள் ஆகிய வினையடிகளை மறந்து பெறு, உறு, சுடு, நடு ஆகியவற்றைத் தம் வினையடிகளாக ஏற்றுக் கொண்டன என்று தோன்றுகின்றது. வரலாற்று நிலையில் மொழியில்நிகழ்ந்த பல இசைகேடு (Discrepancies)களுள் இதனையும் ஒன்றாகக் கருதலாம்.

சில பெயரடைகள் :

மேலே குறிப்பிட்ட வினையடிகளைப் போலவே சில பெய

ரடை (Nominal Attributes)களும் அமைப்பில் சிக்கல் நிறைந்தன வாகக் காணப்படுகின்றன. பின் வரும் எடுத்துக்காட்டுக்களை நோக்குக :

1. நெடு/நெட்டு. எ-டு. நெடு மரம்/நெட்டெழுத்து.
2 வேறு/வேற்று எ-டு. வேறுவேலை/வேற்றாள்.
3. குறு/குற்று எ-டு குறுந்தொகை/குற்றெழுத்து.
4. சிறு/சிற்று எ-டு. சிறுமலர்/சிற்றலை, சிற்றூர்.
5. வெறு/வெற்று எ-டு. வெறும் பேச்சு/வெற்றுரை.

பொதுவாக நெடு, வேறு, குறு, சிறு, வெறு ஆகிய பெயரடைகள் உயிர் முதலாகிய சொற்களின் முன் நிகழும்போது முறையே நெட்டு, வேற்று, குற்று, சிற்று, வெற்று என வல்லொற்று மிகுந்து நின்றனவாகக் கொள்ளப்பெறும். ஆனால் வண்ணனை நிலையில் அமைந்த கூற்றாகவே இதனைக் கருதத் தோன்றுகின்றது. வரலாற்று நிலையில் மேற்படி பெயரடைகளைப் பின்வருமாறு ஆராயலாம்.

அ. நெட்டு < நெள்த்து < நெள்-து
வேற்று < வேல்த்து < வேல்-து
குற்று < குல்த்து < குல்-து
சிற்று < சில்த்து < சில்-து
வெற்று < வெல்த்து < வெல்-து

ஆ. நெடு < நெண்டு < நெண்து < நெண்ம்-து < நெள்ம்-து. நெள்ம்- < நெள்-உம்.
வேறு < வேன்று < வேன்து < வேன்ம்-து < வேல்ம்-து. வேல்ம்- < வேல்-உம்.
குறு < குன்று < குன்து < குன்ம்து < குல்ம்-து. குல்ம்- < குல்-உம்.

சிறு < சின்று < சின்து < சின்ம்து < சில்ம்-து
சில்ம்- < சில்-உம்.

வெறு < வென்று < வென்து < வென்ல்து < வெல்ம்-
து. வெல்ம் - < வெல்-உம்.

சில புணர்ச்சி நிலைகள்: தொல்காப்பியத்தில் தெளிவு படுத்தப் பெறாத சில புணர்ச்சி வழக்குகள் பழந்தமிழில் பயின்று வழங்குகின்றன. இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிக்கப் பெற்ற செய்திகளைப் பின்புலமாகக் கொண்டு சில புணர்ச்சி நிலைகளை இங்கு ஆராயலாம். வல்லொலிகளின் முன் நிகழ்ந்த மெல்லொலி விழ்ச்சி பற்றி முற்பகுதியில் பேசப்பட்டது. இவ் விழ்ச்சி தனிச் சொற்களில் மட்டுமின்றி நிலைமொழி வருமொழி கூட்டத்தின் கண்ணும் பழந்தமிழில் நிகழ்ந்திருக்கலாம் என்று கருதத் தோன்றுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு சங்கப் பாடல்களில் வழங்கும் சில தொடர்களை நோக்குவோம்.

அ விறறந்து (விறல்-தந்து பத்துப்பாட்டு 7·167)
துயிறுறந்து (துயில்-துறந்து. ஷை 6·575)
நிழறிகழ் (நிழல்--திகழ். ஷை 3·95)
கடறூர்க்குவன் (கடல்-தூர்க்குவன் ஷை 9 271)
ஞாயிறொறும் (ஞாயில்-தொறும். ஷை 9·289)
காறிருத்தி (கால்-திருத்தி. ஷை 7·158)
நுதறுடைத்து (நுதல்-துடைத்து. ஷை 5·33)

ஆ தோடாழ் (தோள்-தாழ். ஷை 4·273)
மாக்கடொழுது (மாக்கள் தொழுது, ஷை 5.55–56)
துகடீர்ந்து (துகள்-தீர்ந்து. ஷை 7·127)
இருடூங்கும் (இருள்-தூங்கும். ஷை 10·212)
இயங்கடொடுமின் (இயங்கள்-தொடுமின். ஷை 10·277)
பேய்மகடுவன்றவும் (பேய்மகள்-துவன்றவும்.
ஷை 9.260)
களங்கடொறும் (களங்கள்-தொறும். ஷை 10 464)

மேல் எடுத்துக்காட்டுக்களில் அமையும் புணர்ச்சி மாற்றங்களை வண்ணனை நிலையில் [ல், ள்] + த் > [ற், ட்] என்று குறிக்கலாம். நன்னூலாரும் இதனையேதான் செய்துள்ளார். ஆயினும் லகர ளகரங்கள் தகரத்தின் முன் நிகழும் போது, தகரத்துடன் சேர்ந்து லகர, ளகரங்கள் முறையே -ல்த்த், -ள்த்த்- என அமைந்து பின்னர் -ற்ற்-, -ட்ட்- என நிகழும் போக்கே இயல்பாகத் தோன்றுகின்றது. எனவே மேலே குறிக்கப் பெற்ற எடுத்துக்காட்டுக்களை மெல்லொலி வீழ்ச்சியைப் பின்புலமாகக் கொண்டு பின் வருமாறு ஆராயலாம் போல் தோன்றுகிறது.

அ விறறந்து < விறன்றந்து < விறன்தந்து < விறன் <
விறன்ம் < விறல்ம் < விறல்-உம்

துயிறுறந்து < துயின்றுறந்து < துயின்துறந்து
துயின் < துயின்ம் < துயில்ம் < துயில்-உம்.

நிழறிகழ் < நிழன்றிகழ் < நிழன்திகழ் < நிழன் <
நிழன்ம் < நிழல்ம் < நிழல்-உம்

கடறூர்க்குவன் < கடன்றூர்க்குவன் < கடன்தூர்க்
குவன் < கடன் < கடன்ம் < கடல்ம் < கடல்-உம்

ஞாயிறொறும் < ஞாயின்றொறும் < ஞாயின்தொறும்:
ஞாயின் < ஞாயின்ம் < ஞாயில்ம் < ஞாயில்-உம்

காறிருத்தி < கான்றிருத்தி < கான்திருத்தி < கான் <
கான்ம் < கால்ம் < கால்-உம்

நுதறுடைத்து < நுதன்றுடைத்து < நுதன்துடைத்து.
நுதன் < நுதன்ம் < நுதல்ம் < நுதல்-உம்

ஆ தோடாழ் < தோண்டாழ் < தோண்தாழ் < தோண் <
தோண்ம் < தோள்ம் < தோள்-உம்

மாக்கடொழுது < மாக்கண்டொழுது < மாக்கண்
தொழுது. மாக்கண் < மாக்கண்ம் < மாக்கள்ம்
< மாக்கள்-உம்

துகடீர்ந்து < துகண்டீர்ந்து < துகண்தீர்ந்து. துகண்
< துகண்ம் < துகள்ம் < துகள்-உம்

இருடூங்கும் < இருண்டூங்கும் < இருண்தூங்கும்
இருண் < இருண்ம் < இருள்ம் < இருள்-உம்

ஏனைய இரண்டனுக்கும் இவ்வாறே கொள்க. இதே போக்கில் சங்கப் பாடல்களில் நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் சேறும் (நற்றிணை 156·5) *சேறி* (ஷ 126·11) *அகறிர்* (ஷ 37·7 (*முயறி* (கலித்தொகை 17·10) *போறி* (ஷ 144·26) ஆகிய வினைமுற்றுக்களையும் பின் வருமாறு ஆராயலாம்.

(தொடரும்)

"பூத்து மணக்கும் பொலன் கொம்பெனப் பருவம்
வாய்த்த மதுரைத் தமிழ்ச்சங்கம் – காய்த்துப்
பலனளிக்கும் சேதுபதி பதியாய் மன்னி
நலனளிக்குந் தண்ணளிக்கு நன்றி."

— 'செந்தமிழ்' (தொகுதி-12)